வருடாந்த அறிக்கை

2018











NAQDA

இலங்கை தேசிய நீரியல் வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகார சபை

வருடாந்த அறிக்கை

2018

இலங்கை தேசிய நீரியல்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகார சபை
41/1 புதிய பாராளுமன்ற வீதி,
பலவத்த,
பத்தரமுல்ல.

தொலைபேசி இலக்கம் : 011 2786495
பெக்ஸ் இலக்கம் :011 2786493

இலங்கை தேசிய நீரியல்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகார சபை
41/1, புதிய பாராளுமன்ற வீதி,
பலவத்த,
பத்தரமுல்ல.

2019 செப்ரெம்பர் 20 ஆம் திகதி.

கௌரவ கமத்தொழில்இ கிராமிய பொருளாதார அலுவல்கள்,
கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் கடற்றொழில்,
நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்,
கௌரவ கமத்தொழில்இ கிராமிய பொருளாதார அலுவல்கள்,
கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசனம் மற்றும் கடற்றொழில்,
நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு,
மீன்பிடி துறை
மாளிகாவத்தை,
கொழும்பு - 10.

ஐயா!

1998 இலக்கம் 53 கொண்ட இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், 2017 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 2018 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்காக நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்பாக கீழ் குறிப்பிடப்பட்ட அறிக்கையினைச் சமர்ப்பிக்கிறேன்.

- தலைவரின் மீளாய்வு
- பணிப்பாளர் சபையின் அறிக்கை
- கணக்காய்வாளர் அறிக்கை
- வருமான வெளிப்பாடுகள்
- ஐந்தொகை

நம்பிக்கையுள்ள,

என்.பீ. மதவன் ஆரச்சி
தலைவர்

நிறுவனம்சார் தகவல்கள்

நிறுவனத்தின் பெயர்

இலங்கை தேசிய நீரியல்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகார சபை

பணிப்பாளர் சபை

1.	திரு. என்.பீ. மதவன் ஆரச்சி	- தலைவர்
2.	திரு. கே.டி. கருணாரத்ன	- பணிப்பாளர்
3.	திரு. டி.ஜீ. சுமித் விக்ரம	- பணிப்பாளர்
4.	திரு. எஸ்.எம்.ஏ. நெலும்கொல்ல	- பணிப்பாளர்
5.	திரு. மஹேஷ் சமித்த களுகம்பிடிய	- பணிப்பாளர்
6.	திரு. ஜி.பி. ஜானக குமார	- பணிப்பாளர்
7.	திரு. ஈ.ஏ.எஸ்.கே. எதிரிசிங்ஹ	- பணிப்பாளர்
8.	திரு. கீர்த்தி முணசிங்ஹ	- பணிப்பாளர்
9.	திருமதி. பீ.எச். ஹதுன்ஹேவா	- பணிப்பாளர்
10.	பொறியியலாளர் எஸ்.எம்.டி.எல்.கே.டி.அல்விஸ்	- பணிப்பாளர்
11.	திருமதி எச்.ஜீ.ஜே.பீ. விஜேசிரிவர்தன	- பணிப்பாளர்
12.	திருமதி. எஸ்எல்.டி.கே. விஜேசிங்ஹ	- பணிப்பாளர்
13.	திருமதி. எல்.ரி.டி.பேரேரா	- பணிப்பாளா

பிரதான அலுலவகம்

41/1, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்த, பத்தரமுல்ல

கணக்காய்வாளர்

கணக்காய்வாளர் திணைக்களம்

வங்கியாளர்

மக்கள் வங்கி, பத்தரமுல்ல

இலங்கை வங்கி, பெலவத்த

தலைவரின் மீளாய்வு

2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்காக இலங்கை தேசிய நீரியில் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கையினை இத்தால் சமர்ப்பிக்கிறேன்.

அறிமுகம்

இலங்கை தேசிய நீரியல் வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகார சபை 2018 ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பமான 12 மாத கால எல்லைக்குள் கடந்த ஆண்டுகளைப் போன்று செயற்சாதனையில் முன்னேற்றங்கள் காண்பிக்கப்பட்டுள்ளன.

நன்னீர் மீன் உற்பத்தி

அட்டவணை 1 - கடந்த ஆண்டுகளில் நன்னீர் மீன்பிடி மற்றும் நீரியல் வாழ் செய்கை மீன் உற்பத்திகள்

ஆண்டு	நன்னீர் மீன்பிடி மற்றும் நீரியல் வாழ் செய்கை உற்பத்தி (மெ.தொ)	கரையோர நீரியல் வாழ் செய்கை மூலம் இறால் உற்பத்தி (மெ.தொ)	மொத்த உற்பத்தி (மெ.தொ)	கடந்த ஆண்டை விட உற்பத்தி அதிகரிப்பு விகிதாசாரமாக (%)
2012	65,640	3,310	68,950	16
2013	62,480	4,430	66,910	-3
2014	70,600	5,150	75,750	13
2015	60,210	7,090	67,300	-11
2016	67,900	6,030	73,930	10
2017	76,953	5,587	82,540	12
2018	73,910	14,100	88,010	7

2018 ஆம் ஆண்டில் நன்னீர் கடற்றொழில் மற்றும் நீரியல் வாழ் செய்கை மீன் உற்பத்தி 88,010 மெற்றிக் தொன் என்பதுடன், இவ் அளவு 2017 ஆம் ஆண்டை விட 5,470 மெற்றிக் தொன் அதாவது 7% அதிகரிப்புக் காண்பிக்கப்பட்டுள்ளது. நன்னீர் மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்காக மீன் குடம்பி மற்றும் நன்னீர் இறால் குஞ்சுகளை நீர் நிலைகளில் இடுவதை அதிகரித்தல், சமூக பங்கேற்புடன் நீர் தேக்க முகாமைத்துவம், மீன் சினை உற்பத்தியை அதிகரித்தல் போன்ற பல்வேறுபட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் 2018 ஆம் ஆண்டில் உவர் நீர் இறால் உற்பத்தி மெ.டொ. 8180 என்பதுடன் அவ் அளவு மெ.டொ. 3550, அதாவது கடந்த ஆண்டிற்கு இணைவாக 43% அதிகரிப்பாகும். சிறந்த முகாமைத்துவ செயற்பாடுகள் மற்றும் நோய் கட்டுப்பாட்டு நிர்வாக முறைகளை அமுல்படுத்தியதைப் போன்று வெள்ளப் பெருக்கினால் ஏரி சுத்தடைந்தமையினால் ஏறியில் மிகச் சிறந்த நிர் காணப்பட்டமையினால் விவசாய பண்ணைகளில் குறைந்தளவு நேய் ஏற்பபட்டமையினால் உவர் நீர் இறால் உற்பத்தி அதிகரித்துள்ளது.

அந்நிய நாட்டுச் செலவாணி உழைப்பு மற்றும் கிராமிய அபிவிருத்திக்கான பங்களிப்பு

2018ஆம் ஆண்டின் நன்னீர் மீன் மற்றும் நீரியல் வாழ் செய்கை உற்பத்திப் பெறுமதி ரூபா 24.86 பில்லியனாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், இதன் மூலம் கிராமிய பொருளாதாரத்திற்கு அதிஉயரிய பங்களிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் செய்கை மேற்கொள்ளப்பட்ட இறால்ஏற்றுமதியினூடாக ரூபா 3,485மில்லியன் அந்நிய நாட்டுச் செலாவணி உழைக்கப்பட்டுள்ளதுடன்,இது 2017 ஆம் ஆண்டில் ரூபா 3,213 மில்லியனுடன் ஒப்பீடு ஒப்பீடு செய்யும் போது 8% அதிகரிப்பாகும். அலங்கார மீன் ஏற்றுமதியின் மூலம் ரூபா 3,213 மில்லியன் அந்நிய நாட்டுச் செலாவணி ஈட்டப்பட்டுள்ளதுடன், இது 2017 ஆம் ஆண்டின் ரூபா 2,288 மில்லியன் உடன் ஒப்பீடு செய்யும் போது 15% அதிகரிப்பாகும்.

மீன் குஞ்சு உற்பத்தி மற்றும் விநியோகம்

2018ஆம் ஆண்டின் உடவலவை, தம்புள்ள, இஹினியாகல, கலாவெவ, இரணமடு மற்றும் நுவரெலியா நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மீன் குடம்பிகளின் எண்ணிக்கை182.52 மில்லியன்களாகும். இக்குடம்பிகளை கூடுதலாக மீன் குஞ்சுகள் வரை விருத்தி செய்வதற்காக தனியார் வாவி, கூடுகள், அணைகள் மற்றும் சமுகம்சார் அமைப்புக்களினால் முகாமைத்துவம் செய்யப்படும் மீன் சினை உற்பத்திப் பிரிவிற்காக வழங்கப்பட்டுள்ளது. இது 2017 ஆம் ஆண்டில் குடம்பி உற்பத்தியுடன் ஒப்பீடு செய்யம் போது 19% உற்பத்தி அதிகரிப்பு காண்பிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை - 2 - குடம்பி உற்பத்தி மற்றும் விநியோகம்

உற்பத்தி அலகுகள்	ஆண்டு					
	2013	2014	2015	2016	2017	2018
சமுகம்சார் அமைப்பினூடாக மீன் உற்பத்தி அலகிற்காக	12.52	6.57	11.90	15.76	19.13	26.35
நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையத்தின் மீன் குஞ்சி உற்பத்திக்காக	62.74	55.39	50.79	57.64	60.82	79.02
தனியார் வாவி உரிமையாளர்களுக்காக	21.94	11.93	15.67	8.53	6.63	16.89
கூடுகள் / அணைகளுக்காக	0.84	2.02	9.95	30.34	47.20	60.26
மொத்தம்	**98.04**	**75.91**	**88.31**	**112.27**	**133.78**	**182.52**

மீன் குஞ்சு உற்பத்தி

2018ஆம் ஆண்டின் நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையம், சமுகம்சார் மீன் உற்பத்தி அலகுகள் மற்றும் தனியார் வாவிகளில் மீன் குஞ்சுகள் 111.63 மில்லியன் உற்பத்தி

செய்யப்பட்டது. இது 2017 ஆம் ஆண்டில் குடம்பி உற்பத்தியுடன் ஒப்பீடு செய்யும் போது 35% அதிகரிப்பாகும். மேற்கூறப்பட்ட மீன் குஞ்சு உற்பத்தியில் 43% நீரியல் வாழ் அபிவிருத்தி மத்திய நிலையத்தின் மூலமும் எஞ்சியது நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையத்தின் மூலம் வெளியிடப்பட்ட சினை தனியார் வாவி, கூடுகள், அணைகள் மற்றும் சமூகம்சார் அமைப்புக்களினால் முகாமைத்துவத்திற்குட்படுத்தப்படும் மீன் சினை அலகுகளை விருத்தி செய்வதன் மூலம் பெறப்பட்டுள்ளது. நீர் நிலைகளில், அணைகளில் மீன் குஞ்சுகள் மீன் சினை குஞ்சு வரை விருத்தி செய்வதை அறிமுகப்படுத்துவதன் மூலம் மீன் குடம்பி உற்பத்தியினை அதிகரிக்க முடிகின்றது.

அட்டவணை - 3 – மீன் குடம்பி உற்பத்தி மற்றும் விநியோகம்

உற்பத்தி அலகுகள்	ஆண்டு					
	2013	2014	2015	2016	2017	2018
சமூகம்சார் அமைப்பினூடாக மீன் உற்பத்தி அலகிற்காக	5.76	4.27	7.24	10.30	13.38	17.48
நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையத்தின் மீன் குஞ்சு உற்பத்திக்காக	34.94	30.94	39.65	37.29	38.07	48.20
தனியார் வாவி உரிமையாளர்களுக்காக	8.43	4.81	6.06	4.07	3.31	7.16
கூடுகள் / அணைகளுக்காக	0.26	0.96	2.26	18.11	28.16	38.79
மொத்தம்	**49.39**	**40.98**	**55.21**	**69.77**	**82.92**	**111.63**

மீன் குஞ்சு விநியோகம்

நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையம், தனியார் வாவி, சமூகம்சார் மீன் உற்பத்தி அலகுகள்,கூடுகள் மற்றும் அணைகள் மூலம் 2018ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட மீன் குஞ்சுகளை நீர் நிலைகளில் இடப்பட்டமை தொடர்பான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டில் கூடுதலான மீன் குஞ்சுகள் இடப்பட்டதன் மூலம் 2019 ஆம் ஆண்டில் நன்னீர் கடற்றொழில் மற்றும் நீரியல் வாழ் செய்கை மீன் உற்பத்தியினை அதிகரிக்க முடிந்துள்ளது.

அட்டவணை 4 - மீன் குஞ்சுகளை இடல் - 2018

நீர் நிலைகளின் வகைகள்	நீர்நிலைகளின் எண்ணிக்கை	மீன் குஞ்சுகள் இடப்பட்டமை (மில்லியன்)
பாரிய நீர் நிலைகள்	41	30.06
நடுத்த அளவு நீர் நிலைகள்	78	31.19
சிறிய அளவு நீர் நிலைகள்	288	32.78
பருவகால நீர் நிலைகள்	491	9.11
வாவிகள்	1170	3.45
கங்கைகள் மற்றும் ஏரிகள்	-	3.72
மொத்தம்	**1,075**	**110.31**

நன்னீர் மீன் உற்பத்தியினை அதிகரிப்பதன் மூலம் போசாக்கு மட்டம் மற்றும் கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக வடமத்திய மகாணத்தில் மீன் குடம்பி பெற்றுக் கொள்ளும் நோக்குடன் பொலன்னறுவை செவனபிடிய நீரியல் வாழ் உயிரின செய்கை அபிவிருத்தி மத்திய நிலையத்தின் நிர்மாண செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன

தம்புள்ள மீன் மரபணு விருத்தி அலகினைத் தாபித்தல்

கூடுதலான போசாக்குக் கொண்ட மற்றும் கூடுதலான பெறுமதியிலான உள்நாட்டு விசேட மீன் இனப் பெருக்கம் மூலம் மீன் உற்பத்தியினை மேம்படுத்தல், மொத்தமாக தேசத்தில் அழிவடைந்து செல்லும் விசேட மீன் இனங்களை அதிகரித்தல் மற்றும் பாதுகாத்தல், கூடுதலான வளர்ச்சி வேகம் கொண்ட புதிய மீன் வகைகளையும் உள்நாட்டைப் போன்று விசேடமாக வனலூலா (*Ophiocephalus striatus*), மற்றும் வளையா (*Walago attu*)உற்பத்தி செய்து நன்னீர் மீன் இனப்பெருக்கம் மேம்படுத்தப்படும். அலங்கார மீனின் நிறங்கள், அதன் வலிமை மற்றும் நன்மைக்கமைய மரபணு தொழில்நுட்ப இனப்பெருக்க முறைகளை பயன்படுத்தி ஏற்றுமதித் தரத்திற்கு ஏற்றவகையில் இவ் விசேட வகைகளின் தாய் மீன் உற்பத்திகளை மேற்கொள்வது இதன் நோக்கமாகும். நிர்மானப் பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன், மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 150 மில்லியனாகும்.

நன்னீர் இறாலுக்குப் பின்னரான குடம்பி உற்பத்தி

பம்பளை மற்றும் கஹந்தமோதரயில் அமைந்துள்ள இனப்பெருக்க நிலையம் மற்றும் தனியார் இனப் பெருக்க நிலையங்கள் மூலம் 2018ஆம் ஆண்டில் நன்னீர் இறாலுக்குப் பின்னரான குடம்பிகள் 73.76 மில்லியன் உற்பத்தி செய்யப்பட்டதுடன், உரிய ஆண்டுக்குள் இடப்பட்ட அளவு கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

அட்டவணை 5 - நன்னீர் இறாலுக்குப் பின்னரான குஞ்சுகளை இடல் - 2018

நீர் நிலைகளின் வகைகள்	நீர்நிலைகளின் எண்ணிக்கை	இடப்பட்ட குடம்பிகளின் எண்ணிக்கை (மில்லியன்)
பாரிய நீர் நிலைகள்	30	22.48
நடுத்தர நீர் நிலைகள்	48	24.75
சிறிய நீர் நிலைகள்	132	23.17
பருவகால நீர் நிலைகள்	3	0.10
வாவிகள்	36	0.17
ஏரிகள்	8	3.09
மொத்தம்	**257**	**73.76**

இலங்கையில் நன்னீர் இறால் செய்கைக்காக தேவையான நன்னீர் இறால் நீர் நிலைகளில் நன்னீர் இறாலுக்குப் பின்னர் சினைகள் அதிகரிப்பதனால் நன்னீர் இறால் உற்பத்தியினை அதிகரிப்பதன் ஊடாக போசாக்கு மட்டம் மற்றும் கிராமிய பொருளாதாரத்தை அதிகரிப்பதன் நோக்கத்திற்கமைய அதிகார சபையினால் திருகோணமலை,கல்லரார் இல் புதிய நன்னீர் இறால் இனப்பெருக்க மத்திய நிலையத்தை நிர்மானிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. மேலும் பம்பளை மற்றும் ஹகந்தமோதரையில் அமைந்துள்ள இனப்பெருக்க மத்திய நிலையங்களில் இனப்பெருக்க நிலையம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் மூலம் நீர் நிலைகள் மற்றும் வாவிகளில் நன்னீர் இறால் சினைகளை இடும் அளவு அதிகரிக்கும். இதன் மூலம் நீர்த் தேக்கங்கள் மற்றும் வாவிகளிலிருந்து கிடைக்கும் நன்னீர் இறால் அறுவடை அதிகரிப்பதுடன், ஏற்கனவே வருமானம் அதிகரித்துள்ளது. மேலும் மீனவர்களின் வாழ்க்கைத் தரமும் மேம்படுகின்றது. ஏற்கனவே மூன்று நிறுவனங்கள் நன்னீர் இறால் ஏற்றுமதி செய்ததுடன். 2018 ஆம் ஆண்டில் 1340 மெ.தொன் அறுவடை பெறப்பட்டுள்ளதுடன், 138 மெ.தொன் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. நன்னீர் இறால் கூடுதலான பெறுமதி கொண்ட விசேட வகை என்பதனால் மீனவர்களின் வருமானமும் அதிகரிக்கின்றது. நன்னீர் இறால் நீர்த்தேக்கங்களில் இடுவவதற்காக முதலீடு செய்வதன் மூலம் கிடைக்கும் பிரதிலாபம் மீன் குடம்பி இடுவதற்கு இணைவாக அதிகரிப்பாகும்.

இலவச மீன்/ இறால் குஞ்சுகளை வெளியிடும் வேலைத்திட்டங்கள்

இவ் வேலைத்திட்டத்தின் கீழ் 26.07 மில்லியன் மீன் சினைகள்,14.54 மில்லியன் குடம்பிகள் மற்றும் நன்னீர் இறாலுக்குப் பின்னரான 44.88 மில்லியன் குஞ்சுகள் 2018 ஆம் ஆண்டில் நீர்த்தேக்கங்களில் இடப்பட்டுள்ளன.

நீர்த் தேக்கங்களின் மீன்பிடி முகாமைத்துவச் செயற்பாடுகள்

சட்டரீதியாக அங்கீகரிக்கப்படாத மீன்பிடி உபகரணங்கள் பயன்படுத்துவதை தடுத்து, நீர் நிலைகளில் நன்னீர் மீன்பிடிச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல் மற்றும் முகாமைத்துவம்

செய்வதற்காக எமது அதிகார சபை மற்றும் நன்னீர் மீன்பிடிச் சங்கத்தின்ஊடாக 2018 ஆம் ஆண்டிற்குள் 277 சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு மேலதிகமாக் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலுக்காக 150 படகுகள் மற்றும் 2000 கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன. ஏற்கனவே செயற்படும் நன்னீர் கடற் படகுகளின் எண்ணிக்கை 9795 வரை அதிகரித்துள்ளது.

இறால் செய்கைக் கைத்தொழில்

வெள்ளைப்புள்ளி நோய் காரணமாக பாதிக்கப்பட்ட இறால் செய்கை கைத்தொழிலை மீள்கட்டமைப்பதற்காக கடந்த சில ஆண்டுகளுக்குள் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்கள் இறால் உற்பத்திப் பண்ணை மேற்பார்வைப் பிரிவினால் அமுல்படுத்தப்பட்டன. இச்செயற்பாடுகளுக்கிடையே ஒல்லாந்தர் வாய்க்காலைத் தோண்டுதல், வலயங்களாக வேறுபடுத்தல் மற்றும் செய்கை நேர அட்டவணையை அறிமுகப்படுத்தல், தேவையான கோவைகளை வகுத்தல், அமுல்படுத்தல், இறால் இனப்பெருக்க மேற்பார்வை மற்றும் இறாலுக்குப் பின்னரான குடம்பிகள் மற்றும் தாய் இறால் பரிசோதனைகளை மேற்கொள்வதும் பிரதான பணிகளாக அமைந்தன. இதற்கு மேலதிகமாக பதுலுஓயாவில் அமைந்துள்ள இறால் நோயை இனங்காணல் மற்றும் சுகாதார முகாமைத்துவ ஆய்வு கூடத்தில் இறால் செய்கையாளர்களுக்காக நோய் நிர்னயிப்பு தொடர்பான சேவைகளும் வழங்கப்பட்டன.

நீரியல் வாழ் செய்கை முகாமைத்துவ அனுமதிப்பத்திரங்கள் 717 வழங்கப்பட்டுள்ளதுடன், இதில் 682 இறால் பண்ணையாளர்களுக்காகவும் 35 இறால் இனப்பெருக்க நிலையங்களுக்காகவும் 06 தாய் இறால் சேகரிப்பாளர்களுக்காகவும் வழங்கப்பட்டது. நெக்டா நிறுவனத்தின் மூலம் 2018 ஆம் ஆண்டுக்குள் இறாலுக்குப் பின்னரான குடம்பி மற்றும் தாய் மீன்களின் நோய்க்காக PCR பரிசோதனைகள்4205 மேற்கொள்ளப்பட்டதுடன்,இப்பரிசோதனைகள் பதுலுஓயாவில் தாபிக்கப்பட்டுள்ள இறால் நோய் நிர்னய மற்றும் சுகாதார ஆய்வு கூட விஞ்ஞான நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இப்பரிசோதனை விவசாயப் பண்ணைகளில் இடுவதற்காக ஆரோக்கியம் கொண்ட குஞ்சுகளை இனப்பெருக்கம் செய்ய பயன்மிக்கதாக அமைந்துள்ளது.

2018ஆம் ஆண்டில் புத்தளம் மாவட்டத்தில் 48 இறால் இனப்பெருக்க நிலையங்கள் மற்றும் 700 இறால் பண்ணைகள் அமுலில் இருந்தன. உரிய ஆண்டிற்குள் இறாலுக்குப் பின்னரான குஞ்சு உற்பத்தி 520 மில்லியனாகும்.

ஏற்கனவே வடமேல் மாகாணத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ள செய்கை நிலப்பரப்பின் மூலம் உயர்ந்தபட்சம் இறால் அறுவடையும் பெறப்படுகின்றது. இம் மாகாணத்தின் இறால் உற்பத்தியினை அதிகரிப்பதற்காக செய்கை முறையின் கீழ் நீர் மீள்சுழற்சி முறை மற்றும் உயிரியல் பாதுகாப்புச் செய்கை விவசாயப் பண்ணை அலகினை மேம்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் மாகாணத்தின் இறால் உற்பத்தியினை அதிகரிக்க முடிந்துள்ளது.

அத்துடன், இறால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக, கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து அமுல்படுத்தப்பட்டுள்ள கெள்கை அடிப்படையிலான தீர்மானத்திற்கு அமைய *Peneaus monodon* விஷேட வகையை விட கூடுதலான அபிவிருத்தி வேகம் கொண்ட *Litopeneaus vannamei* விஷேட வகையை அறிமுகப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதற்கு அமைய மன்னாரில் முன்னோடி செயற்திட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது

மட்டக்களப்பு மாவட்டத்தில் இறால் செய்கை அபிவிருத்தி.

புதுக்குடியிருப்பு உவர் நீர் இறால் இனப்பெருக்க நிலையம் அரச - தனியார் தொழில் முயற்சியாளர்களின் கீழ் செயற்படுவதுடன் இதன் மூலம் மட்டக்களப்பு மாவட்டத்திற்காக தேவையான குஞ்சுகள் வழங்கப்படுகின்றது. தனியார் இவ் இனப்பெருக்க நிலையத்தை நடாத்திச் செல்வதுடன் 2018 ஆம் ஆண்டில் நன்னீர் இறாலுக்குப் பின்னர் 35.2 மில்லியன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் விரிவாக்கப்பட்டுள்ள இறால் செய்கைக் கைத்தொழிலுக்காக தேவையான நன்னீர் இறாலுக்குப் பின்னரான குஞ்சு தேவைகளை நிவர்த்தி செய்ய கிழக்கு மாகாணத்தில் தாபிக்கப்பட்டுள்ள ஒரேயொரு இனப்பெருக்க நிலையம் இதுவாகும்.

அதிகார சபையினால் வசதிகள் வழங்கப்பட்ட மட்டக்களப்பு, வாகரையில் அமைந்துள்ள கொத்தனி இறால் செய்கை விவசாயப் பண்னை, சூழலுக்கு உகந்த நிலையான நன்னீர் இறால் செய்கைக்கான மாதிரி விவசாயப் பண்ணையாகும். 2018 ஆம் ஆண்டில் 203 மெ.தொன் அறுவடை பெறப்பட்டுள்ளது. மட்டக்களப்பு விமான நிலைய முகாமில் தாபிக்கப்பட்டுள்ள இக்கண்காட்சி விவசாயப் பண்ணையினை பயன்படுத்தி நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேசத்தின் இறால் செய்கையாளர்களின் சிறந்த முகாமைத்துவ அனுபவங்கள் மற்றும் நிலையான இறால் செய்கை தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. தற்போது இக்கண்காட்சி விவசாயப் பண்ணைகள் மட்டக்களப்பு விமான நிலைய முகாம் மூலம் முகாமைத்துவத்திற்குட்படுத்தப்படுகின்றது. 2018 ஆம் ஆண்டில் 440,000 குஞ்சுகள் இடப்பட்டுள்ளதுடன், இதில் 5.23 மெ.தொன் அறுவடை பெறப்பட்டுள்ளதுடன் மேலும் 366 செய்கையாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

அலங்கார மீன் மற்றும் நீரியல் வாழ் செடி செய்கை

நெக்டா நிறுவனத்தினால் மீன்களின் புதிய வகைகளை உருவாக்கல், தொழில்நுட்ப அபிவிருத்தி, தாய் மீன் வழங்கல், மீனுக்கான நோயினை அடையாளம் காணல், பயிற்சி மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை வழங்குதல் போன்ற வழங்குதல் போன்ற பணிகள் மூலம் அலங்கார மீன் மற்றும் நீரியல் வாழ் செடிச் செய்கையைப் போன்று ஏற்றுமதிக்காக உதவிகளும் வழங்கப்படுகின்றன. றம்படகல்ல மற்றும் கினிகத்ஹேன ஆகிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையங்களில் அலங்கார மீன் மற்றும் நீரியல் வாழ் செடி செய்கை அபிவிருத்திக்குரிய பணிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்தன. மரபணு பல்வகைத் தன்மையினை விருத்தி செய்வதற்காக றம்படகல்ல மத்திய நிலையத்தில் கப்பி வகை மற்றும் ஹினிகத்ஹேன மத்திய நிலையத்தில் சுவோட்டேல் வகைகளின் மரபணு விருத்தி

வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும் றம்படகல்ல மத்திய நிலையத்தில் சுவோட்டேல் வகையில் 07 புதிய அலங்கார மீன் வகைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

அலங்கார நீரியல் வாழ் சொடிகளை நடுவதற்காக றம்படகல்ல மத்திய நிலையத்தில்செடிகள் நடும் ஆய்வுகூடம் தாபிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படை நோக்கமாக அமைவது தொழில்நுட்ப மற்றும் நீரியல் வாழ் செய்கை ஏற்றுமதிகள் ஊடாக அந்நிய நாட்டுச் செலாவணியினை உழைப்பதாகும். இங்கு நடப்படும் நீரியல் வாழ் செடிகளை கொள்வனவு செய்தல் மற்றும் ஏற்றுமதி வரி அக்ரி தனியார் கம்பனியுடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டுள்ளதுடன் 2018 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட நீரியல் வாழ் செடிகளின் எண்ணிக்கை 88,086 என்பதுடன், இதில் 63,500 நீரியல் வாழ் செடி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

இம் மத்திய நிலையத்தின் மீன் 3.16 மில்லியன் விவசாயிகளுக்கு மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு சந்தைப்படுத்தப்பட்டள்ளது. தாய் மீன் 118,043 உம் இவ் அண்டில் வழங்கப்பட்டுள்ளது. நன்னீர் அலங்கார மீன் கூடுதலான நிறம் கொண்ட மற்றும் சிறந்த தோற்றத்துடன் கப்பி, சுவோட்டேல், பிலேட், பார்பிஸ், டேட்ரா, ஏன்ஜல், குரம் மற்றும் கரிபிஸ் விஷேட வகைகளைக் கொண்டதாகும். இலங்கையில் இருந்து ஏற்றமதி செய்யப்பட்ட இவ் நன்னீர் விஷேட வகைகளில் 60-70% மாத்திரம் கப்பிகளைக் கொண்டதாகும். இலங்கையில் நிலையான சுமார் 40 ஏற்றுமதிக் கம்பனிகள் காணப்படுகின்றன. இலங்கையின் அலங்கார மீனுக்கான பிரதான கொள்வனவாளராக காணப்படுவது ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம் ஆகும். உரிய ஆண்டில் அலங்கார மீன் செய்கைத் துறையில் 1403 பேருக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

Live rockநிறுவனம் எமது உற்பத்திப் பரம்பலுக்காக புதிதாக இணைந்துள்ளதுடன், 2018 ஆம் ஆண்டில் 7.05 மில்லியன் ரூபா பெறுமதியான Live rockஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

அலங்கார மீன் இன்பெருக்க நிலையத்தை நிர்மானித்தல்

கொத்தணி முறைக்கு செய்கை வாவி முறைமையினை தாபிப்பதற்காக பொலன்னறுவை, செவனப்பிட்டியவில் கோல்ட் பிஸ் மற்றும் கொய் காப் அலங்கார மீன் இனப்பெருக்க மத்திய நிலையத்தின் நிர்மானப் பணிகள் அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. உயர் தரத்திலான தாய் மீன்கள் மற்றும் மீன் குஞ்சுகள் இன்மை பொலன்னறுவை மாவட்டத்தில் கோல்ட் பிஸ் மற்றும் கொய் காப் அலங்கார மீன் கைத்தொழிலை தொடர்ந்தும் விருத்தி செய்வதற்காக தாக்கம் செலுத்தியுள்ள பிரதான தடையாகும். இதற்காக பொலன்னறுவை, செவனப்பிட்டியவில் அலங்கார மீன் இனப்பெருக்க மத்திய நிலையத்தைத் தாபித்து அதன் மூலம் உயர் தரத்திலான கோல்ட் பிஸ் மற்றும் கொய் காப் மீன் வகைகள் உற்பத்தி செய்யப்பட்டு பொலன்னறுவை மாவட்டத்தில் செய்கையாளர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் பொலன்னறுவை மாவட்டத்தின் கைத்தொழிலின் நிலையான தன்மையினை பேணுவதற்கு முடிந்துள்ளது. இதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் 250 மில்லியன் ரூபாவாகும்.

உவர் நீர் அலங்கார மீன் இனப்பெருக்க மத்திய நிலையம் புத்தளம், பங்தெனிய

ஏற்கனவே இலங்கையில் உவர் நீர் அலங்கார மீன் ஏற்றுமதி செய்யப்படுவது கடலிலிருந்து கூடுதலாக மீன்களைப் பிடித்தல், மீன் கூடுதலான இருக்கக்கூடிய இடங்களை அழித்தல், பவளப் பாறைகளை அழித்தல், கடலில் சேற்று மண் தேங்கி இருத்தல், கடலை மாசடையச் செய்தல் போன்ற பல்வேறுபட்ட சுற்றாடல் காரணங்களுக்கமைய உவர் நீர் அலங்கார மீன் வளர்ச்சி குறைவடைந்து செல்வதுடன் இம்மீன்களை பாதுகாப்பதற்காக எதிர்வரும் காலங்களில் உவர் நீர் அலங்கார மீன் பிடிப்பதை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது இலங்கையின் உவர் நீர் அலங்கார மீன் ஏற்றுமதிக்கு தாக்கம் செலுத்தியுள்ளது. இதனால் செயற்கை இனப்பெருக்கத்தை மேற்கொண்டு ஏற்றுமதி செய்ய வேண்டிய நிலைமை எதிர்காலத்தில் ஏற்படுகின்றது. உவர் நீர் அலங்கார மீனுடன் ஒப்பீடு செய்யும் போது உவர் நீர் அலங்கார மீன்களைப் பிடிப்பதற்காக கூடுதலான விலை காணப்படுவதுடன் வெளிநாட்டு சந்தையிலும் கூடுதலான கேள்விகள் காணப்படுகின்றன.

அலங்கார மீன் உற்பத்தி பரம்பலை அதிகரித்தல், அலங்கார மீன் உற்பத்தியினை அதிகரிப்பதன் மூலம் ஏற்றுமதி வருமானத்தை அதிகரித்தல், தொழில்நுட்ப அறிவினை வழங்கும் நோக்குடன் புத்தளம் பங்கதெனியவில் உவர் நீர் அலங்கார மீன் இனப்பெருக்க மத்திய நிலையத்தை நிர்மானிப்பதற்காக அடிப்படைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதுடன் இதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் 250 மில்லியன் ரூபாவாகும்.

சம்பிரதாயமல்லாத நீரியல் வாழ் செடிச் செய்கைகள்

- **கடல் அட்டை இனப்பெருக்கம் மற்றும் செய்கை**
  கடல் அட்டை இனப்பெருக்க நிலையம்

  மன்னார் ஒலைத்துடுவாயில் அமைந்துள்ள கடல் அட்டை இனப்பெருக்க நிலையத்தின் நிர்மானப் பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன் இதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் 250 மில்லியன் ரூபாவாகும். இலங்கையில் கடல் அட்டைகளை கூடுதலாக பிரபல்யப்படுத்துவதற்காக தேவையான கடல் அட்டை குஞ்சுகளை பெற்றுக் கொள்வது இதன் நோக்கமாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட தனியார் ஏற்று இறக்குமதிக்காக கடல் அட்டை உற்பத்தியினை மேம்படுத்துவதற்காக வர்த்தக மட்டத்தில் கடல் அட்டை உற்பத்திகளுக்காக இனப்பெருக்க நிலையம் முகாமைத்துவத்திற்குட்படுத்தப்பட வேண்டும்.

  மேலும் அதிகார சபையினால் தொழில்நுட்ப அறிவினை வழங்கி புத்தளம் மாவட்டத்தின் அம்பகந்தவில பிரதேசத்தில் தனியார் துறையினால் இனப்பெருக்க மத்திய நிலையம் நடாத்தப்படுவதுடன், 2018 ஆம் ஆண்டில் 105,000 கடல் அட்டை குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. கூடுகள் மற்றும் வாவிகளில் கடல் அட்டை செய்கைக்காக எமது நிறுவனத்தினால் வசதிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் தனியார் துறையினரினால் மன்னார், கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் கடல் அட்டை செய்கைகள் ஆரம்பிக்கப்படடுள்ளன. 2018 ஆம் ஆண்டில் 196 மெ.தொன் கடல் அட்டை (ஈரழிப்பு நிறை) அறுவடை செய்யப்பட்டுள்ளது.

- **கடல்வாழ் செடிச் செய்கை**

வடக்கு கடலில் கடல் வாழ் செடி செய்கை சமூக பங்கேற்புடன் மேற்கொள்ளப்பட்டதுடன் 2018 ஆம் அண்டில் கடல் வாழ் செடி உற்பத்தி 322 மெ.டொன் (ஈரலிப்பு நிறை) அகும். மொத்த செய்கைப் பரம்பல் சுமார் 60 ஹெக்டயராகும்.

- **மோதா மீன் இனப்பெருக்கம்**

அரச – தனியார் தொழில் முயற்சியாளர்களின் கீழ் மோதா மீன் இனப்பெருக்கத்தினை வெற்றிகரமாக மேற்கொள்ள முடிந்துள்ளது. தனியார் இனப்பெருக்க நிலையங்களில் மோதா மீன் இனப்பெருக்கத்திற்காக தொழில்நுட்ப உதவிகள் நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்பட்டன. இது இலங்கையில் மோதா மீன் செய்கையினை விரிவுபடுத்துவதை வழிவகுத்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் மோதா மீன் குஞ்சுகள் 350,000 உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

நீர் கொழும்பு ஏரி, மன்னார், புத்தளம், மட்டக்களப்பு மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் மோதா மீன் செய்கைக்காக தனியார் துறை கவனம் செலுத்தியுள்ளது. ஏற்கனவே 300 செய்கையாளர்கள் மாத்திரம் வாவிகள் மற்றும் கூடுகளில் மோதா மீன் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். 2018 ஆம் ஆண்டில் 147,820 மோதா குஞ்சுகள் இடப்பட்டுள்ளதுடன்,340 மெ.தொன் மோதா அறுவடையும் பெறப்பட்டுள்ளது.

பாரிய கூடுகளில் மோதா மீன் செய்கை செயற்திட்டம் தனியார் கம்பனியினால் திருகோணமலை கடலில் ஆரம்பிக்கப்பட்டது. வர்த்தக மட்டத்தில் கடல் சார்ந்த மீன் செய்கையினை நாட்டிற்கு அறிமுகப்படுத்தல் இதன் மூலம் இடம்பெறுகின்றது. மேலும் இச் செயற்திட்டத்தின் மூலம் நேரடி தொழில் வாய்ப்பினை ஏற்படுத்துவதன் ஊடாக கரையோர மக்களின் வாழ்வாதாரத்தை ஏற்படுத்தல், இயற்கை மீன் வளர்ச்சிக்கு ஏற்படக்கூடிய அழுத்தங்களை கட்டுப்படுத்தல், தொடர்ச்சியாக மீன் உற்பத்தி ஏற்றுமதி சந்தைக்கு வழங்குவதன் மூலம் அந்நிய நாட்டுச் செலவாணியினை அதிகரித்தல், சுற்றுலா பிரயாணிகளின் கவர்ச்சியைப் பெற்றுக் கொள்ளவும் எதிர்பார்க்கப்படுகின்றது. 2018 ஆம் ஆண்டில் 255 மெ.தொன் மோதா அறுவடையும் பெறப்பட்டுள்ளது.

பல்வகை விசேட கடல் வறல் மீன் இனப்பெருக்க மத்திய நிலையம், மட்டக்களப்பு

மட்டக்களப்பு பல்வகை விசேட கடல் வறல் மீன் இனப்பெருக்க மத்திய நிலையச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 2018 ஆம் ஆண்டில் மோதா மீன் குடம்பி 50,000 உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

- **வேக்கயா மீன் இனப் பெருக்கம் மற்றும் செய்கை**

டூனா மீன் இனங்களுக்காக தேவையான மீன் இரையை இறக்குமதி செய்வதற்காக இலங்கை வருடாந்தம் 250 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட நிதியினை செலவிடுகின்றது. இந் நிலைமையின் கீழ் டூனா மீன்களுக்காக தேவையான மீன் இரையினை தொடர்ந்தும் வழங்குவதற்காக வேக்கயா மீன் செய்கையினை விருத்தி செய்வது அத்தியாவசியமாகும். கடந்த காலங்களில் இது தொடர்பில் வெற்றிகரமாக பரிச்சாத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. வேக்கயா மீன்கள் டூனா கைத்தொழிலின் நிறைக்காகப் பொருத்தமான ஒரு வகையான மீன் வகை என்பதுடன் கடந்த காலங்களில் வெற்றிகரமாக பரிட்சாத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கையில் வேக்கயா மீன் இனப்பெருக்க மத்திய நிலையம் இல்லை என்பதுடன் இதனால் வேக்கயா மீன் இனப்பெருக்க மத்திய நிலையத்தை தாபிப்பது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். புத்தளம் மாவட்டத்தின் பங்கதெனிய பிரதேசத்தில் வேக்கயா மீன் இனப்பெருக்க நிலையத்தைத் தாபிப்பதற்காக எமது அதிகார சபையினால் நடவடிக்கைள் எடுக்கப்பட்டுள்ளன.

- **நண்டு இனப்பெருக்கம் மற்றும் செய்கை**

தனியார் இனப்பெருக்க நிலையங்களில் நண்டு இனப் பெருக்கத்திற்கான தொழில்நுட்ப உதவிகள் நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்பட்டன. 2018 ஆம் ஆண்டில் 89350 நண்டு குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன் 62.35 மெ.தொன் நண்டு அறுவடையும் பெறப்பட்டுள்ளது.

நண்டு மற்றும் நீரியல் வாழ் செய்கை கைத்தொழில் பேட்டையை நிர்மானித்தல்

நீரியல் வாழ் செய்கை முதலீடுகளுக்காக பொருத்தமான சூழலை உருவாக்குவதற்காக எமது அதிகார சபை மன்னார் மாவட்டத்தில் 1728 ஹெக்டேயர் நிலப்பரப்பைக் கொண்ட நீரியல் வாழ் செய்கை கைத்தொழிற் பேட்டையும், ஹம்பாந்தோட்டை றக்கவ மற்றும் கல்முள்ள பிரதேசத்தில் 242 ஹெக்டேயர் உட்பட மட்டக்களப்பு மாங்கேணி பிரதேசத்தில் 280 ஹெக்டேயர் நிலப்பிரப்பில் நண்டு செய்கை வலயத்தை நிர்மானிப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ளது. நீரியல் வாழ் செய்கையாளர்களுக்குப் பொருத்தமான சூழலை உருவாக்குதல், சூழலுக்கு உகந்த முறைக்கு மேற்கொள்ளும் நீரியல் வாழ் செய்கைகள் மூலம் உற்பத்தியினை அதிகரித்தல், பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்தி, ஏற்றுமதி வருமானத்தை மேம்படுத்தல், நேரடி மற்றும் மறைமுகத் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவது இதன் நோக்கமாகும். அடிப்படை நோக்கங்களை எட்டுவதற்கு மேலதிகமாக நீரியல் வாழ் உயிரின கைத்தொழில் பேட்டை மற்றும் நண்டு செய்கை வலயத்தை நிர்மானிப்பதற்கான உத்தேச பிரதேசமாக மன்னார், ஹம்பாந்தோட்டை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் தாபிக்கப்பட்டுள்ள கிராமிய பிரதேசம் என்பதுடன், வீதி, மின்சாரம் போன்ற ஏனைய பொது உட்கட்டமைப்பு வசதிகளுடன் ஒருங்கிணைந்த அபிவிருத்தியினை மேற்கொள்வதும் இப்பிரதேச மக்களுக்கு பயன்மிக்கதாக அமைந்துள்ளது. இவ் அபிவிருத்தியின் மூலம் நேரடி மற்றும் மறைமுகமாக சுமார் 5500 க்கு மேற்பட்ட தொழில் வாய்ப்புக்கள் உருவாகின்றன. அத்துடன் அவர்களின் வருமானம் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதன் மூலம் கரையோர சமூகத்திற்கு பிரதிலாபங்கள் கிடைக்கின்றன.

மேலும் பிரதேசத்திற்குள் இத் தொழில்நுட்பத்தை பரவலாக்கவும் முடிகின்றது. கரையோர நீரியல் வாழ் உயிரின உற்பத்தியினை மேம்படுத்துவதன் மூலம் நாட்டின் பொருளாதார விருத்திக்குப் பாரிய பங்களிப்பினை வழங்க முடியும். நீரியல் வாழ் உயிரினக் கைத்தொழில் பேட்டை மற்றும் நண்டு செய்கை வலயங்கள் மூலம் எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி 9075 மெ.தொன் மாத்திரம் என்பதுடன் இதன் மூலம் நாட்டின் ஏற்றுமதி வருமானம் அதிகரிக்கின்றது.

றக்கவ நண்டு செய்கை வலயத்தின் நிர்மானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், கல்முள்ள மற்றும் மாங்கேணி நண்டு செய்கை வலயங்களுக்காக திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதுடன் சுற்றாடல் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கான பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும் மன்னார் நீரியல் வாழ் செய்கை கைத்தொழில் பேட்டைக்காக நாரா நிறுவனத்தினால் சுற்றாடல் மதிப்பீட்டுக் கற்கை (EAS) அறிக்கை வழங்கி அவ் அறிக்கை வனவள தணைக்களத்திற்கு சமர்பிக்கப்பட்டள்ளது.

குளத்துடன் கிராமம் என்ற வேலைத்திட்டம்

குளத்துடன் கிராமம் என்ற செயற்திட்டம் 2016 ஆம் ஆண்டில் கடற்றொழில் மற்றும் நீரியல் வாழ் அபிவிருத்தி அமைச்சின் யோசனைக்கமைய ஆரம்பிக்கப்பட்டது. இது நிரந்தர கிராம வாசிகளின் வாழ்க்கை முறைமையினை விருத்தி செய்யும் நோக்குடன் கடற்றொழில் கிராமங்களை கட்டியெழுப்புவதற்கான பாரிய அபிவிருத்தி வேலைத்திட்டமாகும். கிராமத்தின் உட்கட்டமைப்பு வசதிகள், வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் நலன்புரியை அபிவிருத்தி செய்வதும் இதன் மூலம் இடம்பெறுகின்றது. 2018 ஆம் ஆண்டில் அம்பாறை, அனுராதபுரம், மட்டக்களப்பு, பதுளை, ஹம்பாந்தோட்டை, குருநாகல், கண்டி, மாத்தறை, முல்லைத்தீவு, மொனராகலை, நுவரெலியா. இரத்தினபுரி, பொலன்னறுவை, புத்தளம், திருகோணமலை மற்றும் வவுனியா மாவட்டங்களில் 93 செயற்திட்டங்களுக்காக 167.33 மில்லியன் ரூபா நிதி மாவட்ட செயலக அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதன் கீழ் தளங்களுக்கான பிரவேச வீதியினை அமைத்தல், கடற்றொழில் கிராமங்களின் வீதி புனரமைப்பு, கடற்றொழிலாளர் சமூக மண்டப நிர்மானிப்பு, சேவை இல்ல நிர்மானிப்பு, சிறுவர் பாடசாலை மற்றும் மகப்பேற்று மத்திய நிலையம், ஆரம்பப் பாடசாலைகளை விருத்தி செய்தல் போன்ற செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

வாழ்வாதார மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்

கடற்றொழில் சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல் மற்றும் புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் நோக்குடன் இவ் வேலைத்திட்டத்தின் கீழ் கீழ்க் குறிப்பிட்ட செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. கூடுகளில் மோதா மீன் செய்கை, அலங்கார மீன் செய்கையினை விருத்தி செய்தல், நண்டு செய்கை, மீன் உணவிற்காக வெக்காய செய்கை, அலங்கார மீன் இனப்பொருக்க அலகினை தாபித்தல், நீரியல் வாழ் செடி செய்கை முறைமையினை அபிவிருத்தி செய்தல், சிறியளவு அலங்கார மீன் செய்கை, கடல் வாழ் செடி

செய்கை, சேற்று வாவிகளில் உணவிற்காக மீன் செய்கை மற்றும் மீனவ இல்ல வேலைத்திட்டங்கள் போன்றன அமுல்படுத்தப்பட்டன.

செயற்திட்டம்	ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை	வழங்கப்பட்ட நிதி (ரூபா.மில்)
கூடுகளில் மோதா மீன் செய்கை	3	43.83
அலங்கார மீன் செய்கையை அபிவிருத்தி செய்தல்	35	
நண்டு செய்கை	2	
மீன் உணவிற்காக வெக்காய செய்கை	52	
அலங்கார மீன் இணப்பொருக்க அலகினைத் தாபித்தல்	2	
நீரியல் வாழ் செய்கை முறைமையினை விருத்தி செய்தல்	1	
சிறியளவு அலங்கார மீன் செய்கை	25	
கடல் வாழ் செடி செய்கை	26	
சேற்று வாவிகளில் உணவிற்காக மீன் செய்கை	7	
மீனவ இல்ல வேலைத்திட்டம்		
வீடு புணரமைப்பு	442	
சுத்திகரிப்பு வசதிகள்	48	

நாடெங்கிலும் விரிவடைந்துள்ள நன்னீர் மீனவர்களின் வருமானத் தரத்தினை மேம்படுத்துவதற்காக சகல சந்தர்ப்பத்திலும் அற்பணிப்புடன் செயற்பட்டு இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை பணியாளர் சபையின் உயரிய மட்டத்தில் கௌரவத்திற்குட்படுத்தியதுடன், அவர்களினால் காண்பிக்கப்பட்ட ஒத்துழைப்புக்கள் தொடர்பில் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபைக்கு நன்றியினைத் தெரிவிக்கிறேன். அத்துடன் உதவி வழங்கும் நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், மாகாண சபை, நீர் நிலைகள் கடற்றொழில் அமைப்புக்களுக்காக மீன் சினைகளை வழங்குவதற்காக நிதி வழங்குவதன் மூலம் வழங்கிய ஒத்துழைப்புக்களை இங்கு விசேடமாக குறிப்பிடுகின்றோம். அத்துடன் நீரியல் வாழ் செய்கையாளர்கள், இறால் செய்கையாளர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் ஏனைய அனுசரனையாளர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கிறேன்.

இறுதியாக இலங்கையின் நன்னீர் கடற்றொழில் மற்றும் நீரியல் வாழ் செய்கை அபிவிருத்திக்காக காண்பிக்கப்பட்ட வழிகாட்டல் ஆலோசனைகளுக்காக அதிமேன்மை தங்கிய ஜனாதிபதிக்கும், கௌரவ பிரதமருக்கும், கௌரவ கடற்றொழில் மற்றும் நீரியல் வாழ் அபிவிருத்தி அமைச்சருக்கும், கௌரவ இராஜாங்க அமைச்சருக்கும் நன்றியை தெரிவிக்கிறேன். அதிகார சபையின் செயற்பாட்டுப் பணிகளுக்காக தொடர்ந்தும் வழங்கி வரும் ஒத்துழைப்புக்களுக்காக அமைச்சின் செயலாளர், ஊழியர்கள், நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் பணிகளுக்காக நிதி உதவியை வழங்கிய பொதுத் திறைசேரியின் செயலாளருக்கும் எனது நன்றியை தெரிவிக்கிறேன்.

தலைவர்
இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை

நிலையான அபிவிருத்திற்கு அமைவான செயற்பாடு

நன்னீர் மீன்பிடி மற்றும் நீரியல் வாழ் செய்கை பிரிவின் அபிவிருத்தியின் மூலம் நிலையான அபிவிருத்தி நோக்கம் 1, வறுமையற்ற நிலையான அபிவிருத்தி நோக்கு 2 பட்டினியை ஒழித்தல், நிலையான அபிவிருத்தி நோக்கு 12 - பொறுப்புடன் நுகர்வு மற்றும் உற்பத்தி, நிலையான அபிவிருத்தி நோக்கு 14 - நீரியல் வாழ் செய்கை உட்பட நிலையான அபிவிருத்தி இலக்குகளை எட்டுவதற்கு பங்களிப்பு செய்ய முடிவதுடன் அவை கடற்றொழில் மற்றும் நீரியல் வாழ் வள அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவத்திற்காக பொறுப்பு வாய்ந்த அமைச்சின் மற்றும் நிறுவனங்களின் செயற்பாடுகளின் கீழ் நேரடியாக தொடர்புபடுகின்றது.

நிலையான அபிவிருத்தி நோக்கு 1 வறுமையின்றி காணப்படல் - அதிகார சபையினால் வாழ் வாதார அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்சசியாக மேற்கொள்ளப்படுவதுடன் 2018 ஆம் ஆண்டில் நன்னீர் மீன்பிடி மற்றும் நீரியல் வாழ் செய்கைப் பரிவில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் மற்றும் செய்கையாளர்களின் எண்ணிக்கை 61,593 வரை அதிகரித்துள்ளது. 2018 ஆம் அண்டில் நன்னீர் மீனவர்களின் வருமானம் ரூபா 38,000.00 ஆக காணப்பட்டது.

நிலையான அபிவிருத்தி நோக்கு 2 பட்டினியை ஒழித்தல் - எமது இலக்காக அமைவது பட்டினியை ஒழித்தல், உணவு பாதுகாப்பு மற்றும் போசாக்கினை விருத்தி செய்தல் மற்றும் நிலையான நீரியல் வாழ் செய்கை ஊக்குவிக்கப்படுவதுடன் இதற்காக நன்னீர் மீன் மற்றும் நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தியை மேற்கொள்வதற்காக அதிகாரசபையினால் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2018 ஆம் அண்டில் நன்னீர் மீன் மற்றும் நீரியல் வாழ் செய்கை உற்பத்தி 88,010 மெற்றிக் டொன் என்பதுடன், அது 2017 ஆம் ஆண்டில் 82,540 மெற்றிக் தொன் உற்பத்திக்கு இணைவாக 5,470 மெற்றிக் தொன் அதிகரிப்பாகும்.

நிலையான அபிவிருத்தி நோக்கு 12 - பொறுப்பு மிக்க நுகர்வு மற்றும் உற்பத்தி - நீர் நிலைகளில் மீன் அறுவடை துய்மையான அடிப்படையில் பெற்றுக் கொள்ள முடிவதுடன் இவ் மீன் நீர் நிலைகளை அண்மித்தாக அல்லது கிராமத்தில் விற்பனை செய்யப்படுகின்றது. மிகை மீன் உற்பத்தி நகர சந்தைகளுக்கு சிறந்த முறையில் கிடைப்பதுடன் மேலும் மிகை உற்பத்தி கிராம மட்டத்தில் கருவாடு உற்பத்திகாக பயண்படுததப்படுகின்றது. 2018 ஆம் அண்டில் கருவாடு உற்பத்தி 213 மெற்றிக் தொன் என்பதுடன் 1 கிலோகிராம் ரூபா 500.00 ஆகும். சகல மீனவர்கள் மற்றும் செய்கையாளர்கள் அனுமதிப்பத்திரம் கொண்டதாக அமுல்படுத்தப்படுவதுடன் சிறந்த மீன்பிடி முகாமைத்துவ செயற்பாடுகள் பின்பற்றப்படுகின்றன. அனைத்து முக்கியத்துவம் வாய்ந்த சிறந்த முகாமைத்துவ ஒழுங்கு முறைகளும் கோவைகளாக மாற்றியமைக்கப்பட்டன. மற்றும் முகாமைத்துவ ஒழுங்குகளை அறிமுகப்படுத்தல், பொறுப்பு வாய்ந்த மீன்பிடி செயற்பாடுகளுக்கான உதாரணமாகும். அத்துடன் அனைத்து புதிய நிரியல் வாழ் செய்கை செயற்திட்டம் குறித்து சூழலுக்கு உகந்த பிரவேசம் பயண்படுததப்பவதுடன் இது பொறுப்பு வாயந்த செய்கையினை உறுதிப்படுத்துவதுடன், இறுதியில் பொறுப்புடன் உற்பத்தி மேற்கொள்ளப்படும்.

நிலையான அபிவிருத்தி நோக்கு 14 -நீரியல் வாழ் உயிரினம் - கூடுதலான பயண்பாடு, சட்டவிரோத அல்லது சட்ட விரோதமாக மீன் பீடித்தல், மேசடிகள் காரணமாக உவர் நீர் மீன் அறுவடை நிலையானது எனபதனால் கரையோரங்களில் சமுத்திர நீரியல் வாழ் செய்கையே முன்னேற்றகரமான செய்கையாகும். சமுத்திர நீரியல் வாழ் செய்கைக்காக சூழலுக்கு உகந்த பிரவேச செய்கையினை அபிவிருததி செய்தல் மற்றும் செய்கை முறைமைக்காக சூழலுக்கு உகந்த பொருட்கள் பயண்படுத்தப்படுகின்றன. ஆழமற்ற சமுத்திர பிரதேசங்களில் கடல் வாழ் செடி செய்கை ஊக்குவிக்கப்படுவதுடன் கடல் வாழ் செய்கை ஊக்குவிக்கப்படுவதுடன் கடல் வாழ் செடி செய்கை நீரில் CO_2 ஆவியாகின்றது. இது கடல் நீரில் அமிலத்தை குறைக்க பயண்படுகிறன்றது. சூழல் மற்றும் தொழில்நுட்பம் நிலையான முறையில் தாங்கிக் கொள்ளக் கூடிய கொள்ளவினை கருத்திற் கொண்டு சமுத்திர செயற்பாடுகளை ஊக்குவித்தல் மற்றும் விரிவுபடுத்தப்படுகின்றது.

பணிப்பாளர் சபையின் அறிக்கை

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை ஆய்விற்குட்படுத்தப்பட்ட கணக்குடன் பணிப்பாளர் சபையினால் சமர்ப்பிக்கப் படுகின்றது மிக மகிழ்ச்சியுடனாகும்.

01. அறிமுகம்

கடற்றொழில் மற்றும் நீரியல் அமைச்சின் கீழுள்ள நீரியல் வாழ் செய்கைப் பிரிவு 1998 இலக்கம் 53 கொண்ட இலங்கை தேசிய நீரியல் வாழ் அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தினால் 1999 ஜனவரி மாதம் 29 ஆம் திகதி தொடக்கம் இலங்கை தேசிய நீரியல் வாழ் அபிவிருத்தி அதிகார சபை (நெக்டா - NAQDA) என மாற்றப்பட்டது. ஆரம்பத்தில் பிரதான அலுவலகம் கொழும்பு 10, ரீ.பீ. ஜெயா மாவத்தை, இலக்கம் 307 1/1 என்ற இடத்தில் வாடகைக்குப் பெறப்பட்ட கட்டடத்தில் தாபிக்கப்பட்டது. அது 2003 ஆம் ஆண்டு தொடக்கம் கொழும்பு 9, பேஸ்லைன் வீதியிலுள்ள கட்டடத்திற்கு மாற்றப்பட்டதுடன், 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பிரதான அலுவலகம் பலவத்த பத்தரமுல்லையில் அமைந்துள்ள அதிகார சபைக்காக நிர்மானிக்கப்பட்ட பிரதான கட்டடத்திற்கு மாற்றப்பட்டது.

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன், இது பணிப்பாளர் சபையின் கீழ் நிறுவகிக்கப்படுகின்றது. அதிகார சபையின் பிரதானமாக நன்னீர் நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி, கரையோர நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி, பரவலாக்கல், நிதி மற்றும் மானிட வள அபிவிருத்தி ஆகிய ஐந்து பிரிவினால் மற்றும் ஐந்து பணிப்பாளர்களின் வழிநடத்தலில் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையம் - (AQDC)

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை மூலம் பிரதான நன்னீர் மீன் இனப்பெருக்க மத்திய நிலையம் (AQDC) (08) நன்னீர் இறால் இனப்பெருக்க மத்திய நிலையம் (03) அலங்கார மீன் இனப்பெருக்க மத்திய நிலையம் (02) கீழ் குறிப்பிட்டவாறு நடாத்தப்படுகின்றன.

மத்திய நிலையம்	உற்பத்தியின் விசேடங்கள்.
➢ உடவளவ (காப்)	சாதாரண காப், இந்திய காப், சீன காப்,
➢ தம்புள்ள	சாதாரண காப், இந்திய காப், சீன காப்,
➢ இகினியாகல	சாதாரண காப், இந்திய காப், திலாபியா
➢ நுவரெலியா	சாதாரண காப்
➢ உடவளவ (திலாபியா)	திலாபியா விசேடம்
➢ பொலன்னறுவை	இந்திய காப், சீனக் காப், திலாபியா
➢ இரணமடு	சாதாரண காப், இந்திய காப், சீன காப், திலாபியா
➢ புதிய உடவளவ	சாதாரண காப், இந்திய காப், சீன காப்
➢ பம்பல	நன்னீர் இறால்
➢ தில்லவடவன (கஹந்தமோதர)	நன்னீர் இறால்
➢ கள்ளராவ	நன்னீர் இறால்
➢ ரம்படகல்ல	அலங்கார மீன் இனப்பெருக்க மற்றும் விருத்தியின் மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பான பயிற்சி வேலைத்திட்டங்கள் நடத்துதல்.
➢ கினிகத்ஹேன	அலங்கார மீன் இனப்பெருக்கம் மற்றும் செய்கை
➢ பல்வகை விஷேட கடல் வரல் வரல் மீன் மீன் இணப்பெருக்க மததியநிலையம்	

மேற்கூறப்பட்ட சகல மத்திய நிலையங்களிலும் நீரியல் வாழ் ஆய்வாளர்கள் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றுவதுடன், அவர்களது பொறுப்பாக அமைவது நாடெங்கும் அமைந்துள்ள நீர் நிலையங்களில் இடுவதற்காக தேவையான மீன் குஞ்சு உற்பத்திகளை மேற்கொள்வதாகும்.

கலாவெவ - தேசிய நன்னீர் கடற்றொழில் மற்றும் நீரியல் வள செய்கை பயிற்சி நிறுவகம் (NIFATI)

இந்நிறுவகம் நீரியல் வள செய்கை அதிகார சபையின் பணியாளர் சபை, நன்னீர் மீனவர்கள், மீன் செய்கையாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட அமைப்புக்கள், ஆர்வம் காண்பிக்கும் தரப்பினருக்காக நன்னீர் மீன்பிடி மற்றும் நீரியல் வாழ் செய்கைக்குரிய பயிற்சிகள் நடாத்தப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்காக பயிற்சி வேலைத்திட்டங்களை நடாத்த தேவையான வசதிகள் வழங்கப்படுவதுடன், நிறுவனம் உதவிப் பணிப்பாளர் (பயிற்சி) இன் கீழ் நிறுவகிக்கப் படுகின்றது.

பரவலாக்கப் பிரிவு

பிரதேச நீரியல் வாழ் செய்கை பரவலாக்கல் அலுவலகம் மற்றும் மாவட்ட நீரியல் வாழ் செய்கை பரவலாக்கம் அலுவலகங்கள் 22 நாடெங்கும் அமுல்படுத்தப்பட்டுள்ளன. (மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில்) பிரதேச/ மாவட்ட நீரியல் வாழ் செய்கை பரவலாக்கல் உத்தியோகத்தர், பரவலாக்கல் செயற்பாடுகள், கோவைகளை அமுல்படுத்தல், நீரியல் வாழ் முகாமைத்துவம் அதாவது நீர்த்தேக்கங்களில் மீன் குஞ்சுகளை இடல், மீனவர்களை அறிவுறுத்தும் பணிகள் மற்றும் சட்டவிரோத மீன்பிடி செயற்பாடுகளைத் தவிர்த்தலும், தொழில்நுட்பத்தை வழங்குவதற்கான செயற்பாடுகள மேற்கொள்ளுவதுமாகும்.

2. நோக்கம்

நெக்டா நிறுவனத்தின் பிரதான நோக்கமாக அமைவது விரிவான வழிகாட்டலின் மூலம் நீரியல் வாழ் செய்கையின் அபிவிருத்திக்குத் தேவையான கோவைகளை அமுல்படுத்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திகள், பயிற்சி மற்றும் பரவலாக்கல் செயற்பாடுகள் போன்ற முறைகளுடாக இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கையின் நீடித்த, நிரந்த அபிவிருத்தியாகும். மீன் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் பொருளாதார அபிவிருத்தி, மக்களின் போசாக்கு மட்டத்தை மேம்படுத்தல், ஏற்றுமதி சந்தைக்கு உயரிய பெறுமதி கொண்ட மீன்களை வழங்குதல் மற்றும் தொழில்வாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பத்தினை அதிகரப்பதும, வருமான மட்டத்தினை மேம்படுத்துவதன் மூலம் வறுமையைக் குறைப்பதும் நெக்டா நிறுவனத்தின் ஏனைய நோக்கமாகும்.

15/09/2011 அரச தொழில் சுற்றறிக்கை 58(2) இற்கு அமைய இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை, ஊக்குவிப்பு நிறுவகம் (Promotional Institute) என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

03. 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் மனித வலு தொடர்பான தகவல்கள்.

பிரிவுகள்		எண்ணிக்கை
பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்		01
சிரேஷ்ட முகாமையாளர்கள்		04
நடுத்தர மட்டத்திலான முகாமையாளர்கள்		26
கனிஷ்ட மட்டத்திலான முகாமையாளர்கள்		76
நீரியல் வாழ் ஆய்வாளர்கள்	51	
பிரதேச / மாவட்ட நீரியல் வாழ் செய்கை பரவலாக்கல் உத்தியோகத்தர்கள்	17	
புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர்	03	
கணணி பகுப்பாய்வாளர்கள்	01	
நிதி உத்தியோகத்தர்கள்	01	
நிருவாக உத்தியோகத்தர்கள்	01	
கொள்வனவு உத்தியோகத்தர்கள்	01	
சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்	01	
முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம்		116
நீரியல் வாழ் செய்கை உதவியாளர்கள்	13	
நீரியல் வாழ் செய்கை பரவலாக்கல் உத்தியோகத்தர்கள்	98	
தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்	03	
புத்தகம் பேணுநர்	01	
தொழில் மேன்முறையாள்	01	
முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப அல்லாத		80
ஆரம்பமட்டம்		405
மின் / இயந்திரத் தொழில்நுட்பம்	08	
சாரதி	48	
ஆய்வக உதவியாளர்	03	
சுற்றுலா பங்களாவின் கீப்பர்	03	
சிற்றூழியர்	343	
மொத்தம்		708

4. பிரதான பணிகள்

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான பணியாக அமைவது நன்னீர் மீன் உற்பத்தி மற்றும் நன்னீர் மீன் பயன்பாட்டினை அதிகரிப்பதாகும். தொழில் வாய்ப்புக்கான் சந்தர்ப்பங்களை வழங்குதல், நீரியல் வளம் சார்ந்த உற்பத்தி

நிறுவன அளவினை அதிகரிப்பதை இலக்காகக் கொண்டு இலங்கையின் நீரியல் வாழ் வளம் மற்றும் நீரியல் செய்கை கைத்தொழிலின் நீடித்த நிரந்தர அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவத்தை மேற்கொள்வதாகும்.

5. மூலதனம்

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை 100% திறைசேரி மூலம் மூலதன முதலீடுகளை மேற்கொள்ளும் அரச நிறுவனமாகும். இதன் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை மூலதனம் 90 மில்லியன் ரூபா ஆகும்.

6. வருமானம்

மீன் குஞ்சு விற்பனை, மத்திய நிலையத்தை குத்தகைக்கு வழங்குதல் மற்றும் ஏனைய வருமானமாக அதிகார சபை பெற்றுள்ள வருமானம் 260.29 மில்லியன் ரூபாவாகும். 2018 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான மிண்டெழும் செலவினத்தை தீர்ப்பதற்காக பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்ட நிதியின் அளவு 380.00 மில்லியன் ரூபாவாகும்.

7. அதிகார சபையின் செயற்பாடுகள்

2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை தேசிய நீரியல் வள செய்கை அபிவிருத்தி அதிகார சபை ரூபா 80.65 மில்லியன் தேறிய இலாபம் பெறப்பட்டுள்ளது.

8. பணிகள் தொடர்பான செயற்பாடுகள்

2018 டிசம்பர் 31ஆம் திகதியன்று அதிகாரசபையின் ஐந்தொகை நிதி அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது.

9. மூலதன செலவீனம்

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி சபைக்காக 2018ஆம் ஆண்டு ரூபா 250.00 மில்லியன் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு முழுமையாக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்டது மத்திய நிலையங்களிலுள்ள கட்டடங்கள் மற்றும் வாவிகளை புனரமைப்பதற்கும், சுத்தப்படுத்துவதற்குமாகும்" நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்தல், வாகனம் மற்றும் உபகரணங்கள் போன்ற அமைப்புக்களும் நீரியல் வாழ் செய்கை அபிவிருத்திப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

10. ஏனைய முகவர் நிறுவனங்களுடனான தொடர்புகள்

தனியார் துறையுடன் இணைந்து உவர் நீர் இறால் செய்கை இனப்பெருக்க மத்திய நிலையம், மாதிரி இறால் செய்கை விவசாய பண்ணை, மோதா மீன் இனப்பெருக்க மத்திய நிலையம், கடல் வாழ் செடி செய்கையினை அமுல்படுத்தவதற்காக தேவையான தொழில் நுட்ப மற்றும் உதவிகள் வழங்கப்பட்டன.

11. நிறுவனத்தால் எட்டப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பில் பணிப்பாளர்களின் தலையீடுகள்.

2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காக அதிகார சபையின் பணியாளர் சபை அங்கத்தவர்கள் நிறுவனத்துடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்திற்காக நேரடி மற்றும் மறைமுக தலையீடுகள் மேற்கொள்ளப்படவில்லை.

12. கணக்காய்வாளர்

2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காக இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையில் கணக்காய்வு மேற்கொள்ளப்படுவது அரச கணக்காய்வுத் திணைக்களத்தின் மூலமாகும்.

எவ்எல்எஸ்/ஏ/நெக்டா/1/எவ்/ஏ/2018/27 2019 ஆகஸ்ட் 31

தலைவர்
தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை

தேசிய நீர் உயிர்வாழ் வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 பாதகமான அபிப்பிராயம்

தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

எனது அறிக்கையில் 1.2 ஆம் பந்தியிலுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை வெளிப்படுத்தவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) அதிகாரசபையினால் பயன்படுத்தப்படுகின்ற 16 காணிகளின் பெறுமதி 2018 திசெம்பர் 31 ஆந் திகதியிலும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, 1998 ஆம் ஆண்டின் போது அதிகாரசபையினைத் தோற்றுவிக்கும் போது ஒப்படைக்கப்பட்ட உடவளவில் அமைந்துள்ள ரூபா 89,630,000 இற்கு மதிப்பிடு செய்யப்பட்டிருந்த இரண்டு காணிகளின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காசுப்பாய்ச்சலுக்குத் தாக்கமளிக்காத கொடுக்கல் வாங்கலான 08 ஒப்பந்தங்களுக்குரிய ரூபா 3,097,101 தொகையான பிடித்துவைத்தல்கள், பணக் கொடுப்பனவின்றி நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் கட்டிடமாக மூலதனமாக்கப்பட்ட ரூபா 21,933,698 தொகை மற்றும் 2017 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 10,694,229 ஆக ரூபா 35,655,028 மொத்த தொகை மீளாய்வாண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு வெளிப்பாய்ச்சலாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) நுவரெலியா பிராந்திய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி நிலையம் அமைந்துள்ள காணி 1999 ஆம் ஆண்டின் போது அமைச்சினால் நன்கொடையாக அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அதன் பெறுமதி ரூபா 12,635,000 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. பின்னர் இக்காணி சம்பந்தமாக ஏற்பட்டுள்ள தீர்த்துவைத்தல்களின் சிக்கலின் காரணமாக மீளாய்வாண்டில் அக்காணியை கொள்வனவு செய்வதற்காக அரசாங்க கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 9,237,500 செலுத்தப்பட்டிருந்தது. பின்னர் செலுத்தப்பட்ட பணம் அரசாங்க மானியத்திற்குரிய மூலதன ஒதுக்கத்திலிருந்து கழித்துக் காட்டுவதற்குப் பதிலாக காணியின் பெறுமதிக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலை முடிவுறுத்தப்பட்ட 19 நிர்மாண ஒப்பந்தங்களின் வேலைப்பெறுமதிகளைக் கணிப்பீடு செய்யும் போது கணக்கீடு செய்யப்பட வேண்டிய பெறுமதியை விட ரூபா35,808,699 குறைத்தும் 18 நிர்மாண ஒப்பந்தங்களின் கணக்கீடு செய்யப்பட வேண்டிய பெறுமதியை விட ரூபா 11,361,326 அதிகரித்தும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(உ) உடவளவ பிராந்திய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி நிலையத்தில் தொழிலாளர் விடுதியை நிர்மாணிக்கும் வேலை 2018 நவம்பர் 30 ஆந் திகதி முடிவுறுத்தப்பட்டிருந்தும் அதற்காகச் செலவு செய்யப்பட்ட ரூபா 12,346,772 தொகையை கட்டிடமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலையின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) அதிகாரசபைக்கு திறைசேரியிடமிருந்தும் அமைச்சிடமிருந்தும் கிடைக்கின்ற மூலதன மற்றும் மீண்டுவரும் மானியங்களை கணக்கீடு செய்வதற்கான கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இவ்வாறான கணக்கீட்டுக் கொள்கைகள் இல்லாததன் காரணமாக மூலதன மானியங்களிலிருந்து 2014 ஆம் ஆண்டிலிருந்தும் மீளாய்வாண்டு வரையும் செலவு செய்து வருமானத்திற்கு பதிவழிக்கப்பட்டிருந்த ரூபா 160,131,832 தொகையான மீண்டுவரும் தன்மையான செலவுகளுக்குரிய மானியங்கள் வருமானக் கூற்றில் வருமானமாகக் கணக்கீடு செய்யப்படாது ஒதுக்கமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இம்முறைமையில் கணக்கீடு செய்ததன் காரணமாக மீளாய்வாண்டிற்கான நட்டமும் ரூபா 54,726,364 ஆல் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டிற்கான மீண்டுவரும் செலவுகளுக்காக திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மீண்டுவரும் மானியமாகிய ரூபா 380,000,000 மீளாய்வாண்டிற்கான வருமானமாக வருமானக்கூற்றில் இனங்காணப்பட வேண்டிய போதிலும், இது ஏனைய விபரமான வருமானத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(எ) ரூபா 15,539,130 பெறுமதியான உயிரியல் விஞ்ஞான சொத்துக்களை மதிப்பீடு செய்யும் கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இவ்வாறான கொள்கை இல்லாததன் காரணமாக அதிகாரசபையினால் மீன் குஞ்சுகளை இனப்பெருக்கம் செய்யும் குறிக்கோளில் பேணப்பட்டு வருகின்ற தாய் மீன் இருப்புக்களின் ஆரம்ப மற்றும் இறுதி இருப்புக்களின் பெறுமதி அவற்றின் நியாயமான பெறுமதியை இனங்கண்டு கொள்ளாது விற்பனைக் கிரயத்திற்கு செம்மையாக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான மொத்த இலாபம் ரூபா 7,462,530 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 2,000,000 தொகையான நீண்டகால முதலீடு நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 47 ஆம் பிரிவின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதியானது அதன் நியாயமான பெறுமதியில் குறிப்பிடத்தக்க அளவில் மாற்றமடைந்திருக்கையில் 03 ஆண்டுகளுக்கு அல்லது 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை மீள்மதிப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபையின் தொடக்க ஆண்டான 1998 ஆம் ஆண்டின் பின்னர் அனைத்து சொத்துக்களுக்காகவும் மீள்மதிப்பு நடவடிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஒ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 10 இன் 14 ஆம் பந்தியின் பிரகாரம் அட்டுறு அடிப்படையில் வருமானங்கள் கணக்கீடு செய்யப்பட்ட வேண்டிய போதிலும், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபையுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் போது கிடைக்க வேண்டிய ரூபா 299,222 தொகை அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. என்து அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகள் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் நிருவகிக்கின்ற தரப்பினர்களின் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையினை

கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

முகவராண்மையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக

- ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அதிகாரசபை உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கைகளின் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பீடு செய்தல்.

சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக முகவராண்மையின் தொடர்ந்து நிலைத்திருந்தல் தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதாக என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள்

- அல்லது நிலைமைகளின் அடிப்படையில் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கின்ற தரப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையில் பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் விளக்கமளித்தல்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனைகளிலிருந்து தோன்றுகின்ற வகையில் முறையான நிதி அறிக்கையை முகவராண்மை பேணியுள்ளது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(III) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளது என.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் இலக்குகளைத் தவிர்த்து ஏனைய சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) அதிகாரசபையினால் முன்னைய ஆண்டின் போது பணிக்கொடைகளை கணிப்பீடு செய்யும் போது மொத்த சம்பளத்தில் படிகளையும் உள்ளடக்கி பணிக்கொடைக்காக ஒதுக்கீடு செய்தல் கணிப்பீடு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 12,114,266 ஆல் அதிகரித்து ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், நியமம் இலக்கம் 03 இன் 47(அ) பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது தவறை சரிசெய்து ஒப்பீட்டு ரீதியான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையினால் ஏனைய நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பொலன்னறுவை, பிடிபன, பனாபிடிய ஆகிய 03 காணிகளின் ரூபா 5,000,000 பெறுமதியை மீளாய்வாண்டின் இறுதி வரை கணக்குகளிலிருந்து நீக்குவதற்கு அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

பின்பற்றப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் மற்றும் பொருண்மையான விடயங்களின் மட்டுப்பாடுகளுக்குள் பின்வரும் வெளிப்படுத்தல்களைச் செய்யும் அளவுக்கு எதுவும் எனது கவனத்திற்கு உள்ளாகியிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் அதிகாரசபையின் நிருவாக சபையின் அங்கத்தவர் எவருக்கும் முகவராண்மை சம்பந்தப்பட்ட ஏதாவது உடன்படிக்கை தொடர்பாக நேரடியாக அல்லது மறைமுகமாக வழக்கமான வியாபார நிலைமைகளை மீறி தொடர்புகள் உள்ளது என.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து ஏதாவது தொடர்புட்ட எழுத்துமூல சட்டங்களுக்கு அல்லது அதிகாரசபையின் நிருவாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணக்கமற்ற வகையில் செயற்பட்டுள்ளது என.

சட்டங்கள், விதிகள் / பிரமாணங்களுக்கான தொடர்பு	விபரம்
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை	
(i) நிதிப்பிரமாணம் 135(4)	கொடுப்பனவு வவுச்சர்களை சான்றுப்படுத்துவதற்கு முறைப்படியாக அதிகாரம் ஒப்படைக்கப்படாத ஒரு உத்தியோகத்தரால் மூலதனத் தன்மையான ரூபா 96,889,323 தொகையான 62 கொடுப்பனவு வவுச்சர்கள் சான்றுப்படுத்தப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே லெவுகளைச் சான்றுப்படுத்துவதற்காக நிதி அதிகாரத்தை ஒப்படைக்கும் பெறுமதிகளில் வரம்புகள் ஏற்படுத்தப்பட வேண்டிய போதிலும்நிதி வரம்புகள் குறிப்பிடப்படாது செலவுகளைச் சான்றுப்படுத்தும் அதிகாரம் உதவிப் பணிப்பாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.
(ii) நிதிப்பிரமாணம் 138(8)	வவுச்சர்கள் சரியானவை மற்றும் அனைத்து விபரங்களும் முழுமையானவை என வவுச்சர்களைச் சான்றுபடுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் சான்றுப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான சான்றிதழ் மற்றும் மூல ஆவணங்கள் இல்லாமல் வவுச்சர்களின் புகைப்படப் பிரதிகளை அடிப்படையாகக் கொண்டு ரூபா 5,500,000 செலுத்தப்பட்டிருந்தது.

(iii)	நிதிப்பிரமாணம் 245(2)	ஒரே செயற்பாட்டிற்காக வவுச்சர்களுக்கு மேலதிக பிரதிகளின் மூலம் கொடுப்பனவு செய்யும் போது முகப்பு பிரதி இரண்டாம் பிரதி என்பது குறிப்பிடப்படாது ரூபா 9,450,821 செலுத்தப்பட்டிருந்தது.
(iv)	நிதிப்பிரமாணம் 396	வழங்கப்பட்ட திகதியிலிருந்து 06 மாதங்களை மிகைத்த ரூபா 152,056 பெறுமதியான 06 காசோலைகளுக்காக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(v)	நிதிப்பிரமாணம் 610 மற்றும் 2011 ஏப்ரல் மாதம் 21 ஆந் திகதிய MOFP/ERD/2011/01 ஆம் இலக்க மற்றும் 2014 யூன் மாதம் 26 ஆந் திகதிய MOFP/ERD/2014/01 ஆம் இலக்க நிதி திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கை	2018 ஆம் ஆண்டில் 05 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 14,602,284 பெறுமதியான வெளிநாட்டு மானியங்கள் சம்பந்தமான அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்க வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்டாது வெளிநாட்டு மானியங்களை வழங்கிய நிறுவனங்களுடன் நேரடித் தொடர்பை பேணி அத்தரப்பினர்களுடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்தது.
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை		
(i)	XV ஆம் அத்தியாயத்தின் 5.2 மற்றும் 5.2.1 ஆம் பிரிவுகள்	2015 ஆம் ஆண்டில் சம்பளமற்ற விடுமுறைகளையும் பெற்று கல்விச் செயற்பாடுகளுக்காக வெளிநாடு சென்ற ஒரு உத்தியோகத்தர் 4 ஆண்டுகள் 07

		2015 ஆம் ஆண்டில் சம்பளமற்ற விடுமுறைகளையும் பெற்று கல்விச் செயற்பாடுகளுக்காக வெளிநாடு சென்ற ஒரு உத்தியோகத்தர் 4 ஆண்டுகள் 07 மாதங்கள் 06 நாட்கள் கட்டாய சேவைக் காலத்தில் சேவையாற்றியமைக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 681,588 தொகை அந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.
(ii)	XLVIII ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவு	கஹந்தோதர நன்னீர் இறால் வளர்ப்பு நிலையத்தை நிர்மாணிக்கும் போது மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 947,068 பணம் சம்பந்தமாக பொறுப்பான நபருக்கு எதிராக முறைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசசட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாட்டின் பிரகாரம் அதிகாரசபையின் அதிகாரம், கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணக்கமற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ)பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வளங்களை சிக்கனமாகவும் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் காலப்பகுதிக்குள் உரிய சட்டவிதிகளுக்கு இணங்க பெறுகைகள் மேற்கொண்டு பயன்படுத்தியிருக்கவில்லை என.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தலைமை அலுவலகத்தை உள்ளடக்கி 15 நிலையங்களில் ரூபா 21,409,109 தொகையான மீன் வலைகள் எஞ்சியிருந்த போதிலும், 2018 செப்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி வரை தாய் மீன் முகாமைத்துவத்திற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 8,930,315 தொகையில் 80 சதவீதம் அல்லது ரூபா 7,183,576 தொகையான மீன் வலைகளைக் கொள்வனவு செய்வதற்காகச் செலவு செய்யப்பட்டிருந்தது. தம்புள்ளை, கலாவெவ, உடவளவ, இரணமடு, முருதவெல ஆகிய நிலையங்களில் ரூபா 17,708,604 பெறுமதியான வலைகளின் இருப்பு காணப்பட்டிருந்தும் அந்நிலையங்களில் 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 4,900,000 தொகையான வலைகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

(ஆ) களுடயிகர் இறால்களை வளர்ப்பதற்காக அரசாங்க மற்றும் தனியார் கூட்டு தொழில்முயற்சியின் கீழ் அதிகாரசபை ரூபா 2,000,000 முதலீடு செய்து தோற்றுவிக்கப்பட்ட இனவிருத்தி நிலையமானது தோற்றுவிக்கும் முதலீட்டு உடன்படிக்கையின் பிரகாரம் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டிற்காக அதிகாரசபைக்கு தகைமை பெறவேண்டிய இலாபப் பங்கினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கடல் நீரேரி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 161,400,000 பெறுமதியான களைகள் மற்றும் பங்கசுகளை அகற்றும் 03 இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கான முற்பணமாக ரூபா 42,572,925 வழங்குனருக்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் முற்பணங்கள் கொடுப்பனவானது பிழையான பிணைமுறி ஆவணங்கள் மற்றும் போலியான கையெழுத்துடனான தவறான ஆவணங்களையும் அடிப்படையாகக் கொண்டு செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு முறையற்ற வகையில் செலுத்தப்பட்ட ரூபா 42,572,925 பணம் 06 மாத காலம் தனிப்பட்ட தேவைகளுக்குப் பயன்படுத்தவதற்கு இடமளிக்கப்பட்டு மீண்டும் அறவீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மன்னார் ஓலைதொடுவாய் கடல் அட்டைகள் வளர்க்கும் நிலையத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தின் திட்டங்கள் தயாரித்தல் மற்றும் ஒப்பந்த நிருவாக நடவடிக்கைகளுக்கான ஆலோசனை சேவை ஒப்பந்தத்திற்காக ரூபா 9,895,000 பணம் நன்கொடையளிக்கப்பட்டிருந்தது. இதற்காக ரூபா 7,226,068 தொகை 2019 யூன் 01 ஆந் திகதியளவில் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிர்மாண நடவடிக்கைகளை திட்டமிட்டவாறு முடிவுறுத்தப்படாததன் காரணமாக 2018 மார்ச் 29 ஆந் திகதி மீண்டும் மற்றுமொரு ஆலோசனையாளர் நியமிக்கப்பட்டு ஒப்பந்தத்தை நிருவகிப்பதற்காக ரூபா 3.454,500 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) மன்னார் மாவட்டத்தில் வனசீவராசிகள் நடமாடும் வலயத்திற்குரிய காணியில் கரையோர மற்றும் கடல்சார்ந்த நீர் வாழ் பயிர்ச்செய்கை உற்பத்தியை மேம்படுத்தும் குறிக்கோளுடன் 2016 ஆகஸ்ட் மாதத்திலிருந்து 2018 ஆகஸ்ட் மாதம் வரையான காலத்தில் உரிய நிர்மாண வேலைகளை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டு செயற்திட்டத்திற்கான நீர் மற்றும் மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 25,185,181 செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2019 பெப்ரவரி மாதமளவில் இக்காணி தீர்வு செய்யப்படாததன் காரணமாக இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்படவில்லை என பௌதீக கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2006 பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4:3:2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் ரூபா 100 மில்லியனை மிகைக்காத கிரய மதிப்பீடு அதிகாரசபையின் தலைவரால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும், 03 ஒப்பந்தக்காரர்களின் கிரய மதிப்பீட்டிற்காக நிறுவன தலைவரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.14.1 வழிகாட்டியின் பிரகாரம் ரூபா 01 மில்லியன் வரை மாத்திரம் பிராந்திய பெறுகை குழு நியமித்தல் இடம்பெற்றிருக்க வேண்டிய போதிலும் அதிகாரசபையினால் ரூபா 2,038,201 தொகையான கயிறு மற்றும் நூல்களைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கையானது பிராந்திய பெறுகைக் குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது 12 நிலையங்களுக்கு ரூபா 59,975,000 தொகையான மீன் உணவுகளைக் கொள்வனவு செய்யும் போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மீன் உணவு மாதிரிகளின் ஊட்டச்சத்துக்கள் ஆய்வுகூடத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த உணவுகளின் பங்கசு அதிகரித்தல் மற்றும் மீன் வாசைன அடிக்கடி மாற்றத்திற்கு உட்படுத்தக்கூடியது என்பது தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளாது பயன்பாட்டிற்குப் பொருத்தமற்ற மீன் உணவுகள் கொள்வனவு செய்யப்பட்டதன் காரணமாக ஏற்பட்டிருந்த சிக்கலான நெருக்கடிகள் தொடர்பாக நீர்வாழ் பயிர்ச்செய்கை நிலையத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களால் தலைமை அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2018 ஏப்ரல், மே, யூன், யூலை ஆகிய 04 மாதங்களுக்காக 79,300 கிலோகிராம் மீன் உணவுகளுக்கு கட்டளையிடப்பட்டிருந்தும் 62,970 கிலோகிராம் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தமையின் காரணமாக 04 மாத காலத்திற்காக 17170 கிலோ மீன் உணவு பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது.

(ஏ) பம்பல நன்னீர் இறால் இனவிருத்தி மையத்தில் புதிய இனவிருத்தி நிலையத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்திற்காக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் ரூபா 40.57 மில்லியன் நிதிஏற்பாடுகளில் ரூபா 14,789,817 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இனவிருத்தி கட்டிடத்தை நிர்மாணித்தல், பயிபர் தாங்கியினை ஸ்தாபித்தல், மூடிய வடிகாண் முறைமையைத் தயாரித்தல் முதலியன ஒரு ஒப்பந்தக்காரரின் மூலம் நிறைவேற்றுவதற்கான சந்தர்ப்பம் இருந்தும் தேவைப்பாடு இல்லாது வேலையை பகுதி பகுதியாகப் பிரித்து வழங்குதல் தாமதத்திற்கு காரணமாக இருந்தது.

(ஐ) ரூபா 83 மில்லியன் செலவு செய்து நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட ஹுங்கம நண்டு இனவிருத்தி நிலைய செயல்திட்டத்தில் 85 ஹெக்டயர் பரப்பளவுள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான காணி பிரதேச செயலாளரின் மூலம் அதிகாரசபைக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. மேற்கூறிய காணியை பிரதேச செயலாளரின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் அச்செயற்திட்டத்தின் காணிகளின் பகுதியை தனிப்பட்ட முதலீட்டாளர் ஒருவருக்கு வழங்குவது சம்பந்தமாக உறுதியான நடைமுறை தயாரிக்கப்பட்டிருக்காததுடன் பிரதிபலன்களை மீளப்பெற்றுக்கொள்வதற்காக உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொள்ளும் வேலைத்திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3.1 ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

(அ) அதிகாரசபையின் பணிப்பாளருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வாகனம் 2018 யூலை 30 ஆந் திகதி விபத்துக்குள்ளாகி ரூபா 5,164,091 நட்டம் ஏற்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பொலிஸ் அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காததுடன் 2019ஆகஸ்ட் 02 ஆந் திகதி வரை 09 மாதங்கள் கடந்திருந்தும் திருத்தம் செய்வதற்கும் நட்டத்தை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 193 மில்லியனுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட மன்னார் ஓலைத்தொடுவாவிலுள்ள கடல் அட்டை இனவிருத்தி நிலையத்தின் மூலம் ஒரு ஆண்டிற்கு 700,000 இலிருந்து 1,000,000 அளவான கடல் அட்டைகளை விடுவிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் அந்த தாங்கிகளிலிருந்து உற்பத்தி செய்யக்கூடியதாகவிருந்த கடல் அட்டைகளின் எண்ணிக்கை 350,000 இற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே இச்செயற்திட்டம் தொடர்பாக சாத்தியவள ஆய்வினை மேற்கொள்ளாது ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீன்குஞ்சுகளை இனவிருத்தி செய்து மீனவ சங்கங்களுக்கும் நீர்த்தேங்களுக்கும் விடுவிக்கும் குறிக்கோளுடன் நுவரெலியா நீர்வாழ் பயிர்ச்செய்கை அபிவிருத்தி நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டில் ட்ரவூட் மீன்களை இனவிருத்தி செய்யும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் 2018 மே மாதத்திலிருந்து ட்ரவூட் மீன்கள் ஆக்கிரமித்தல் மீன் இனமாக மஹவெலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் மூலம் பெயரிடப்பட்டதன் காரணமாக அச்செயற்திட்டம் நிறுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக அந்த இனவிருத்தி

நிலையத்தில் நிர்ணயிக்கப்பட்ட கட்டிடங்களும் தாங்கிகளும் எதுவித பயன்பாட்டிற்கும் எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டன.

(ஈ) அதிகாரசபையின் 16 நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி நிலையங்கள் தலைமை அலுவலகத்தை உள்ளடக்கிய 23 மாவட்ட நீர்வாழ் செயற்திட்ட அலுவலகங்கள், 04 உதவிப் பணிப்பாளர் அலுவலகங்கள், 03 கண்காணிப்பு பிரிவுகளையும் (Monitoring Office) உள்ளடக்கிய 47 அலுவலகங்கள் என்பவற்றின் நிதிக் கணக்காய்வு, முறைமை பகுப்பாய்வு, செயலாற்றல் பகுப்பாய்வு, விடேச புலனாய்வு என்பன தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு உள்ளகக் கணக்காய்வுப் பதவியணியினர் இல்லாமையால் போதியளவு பரிசீலனைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை
வருமானக் கூற்று
2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காக

	குறிப்பு	2018	2017 (மீள் வெளியீடு)
		ரூபா	ரூபா
வருமானம்	03	190,566,971.60	113,985,389
விற்பனைச் செலவினம்	04	(156,506,524.71)	(119,178,200)
தேறிய இலாபம்		**34,060,446.89**	**(5,192,811)**
ஏனைய வருமானம்	05	69,727,389.63	63,611,693
உயிரியல் இருப்பு வலருமானம் தேய செயற்பாட்டு வருமானம்		280,050.00	-
		104,067,886.52	**54,418,882**
நிருவாகச் செலவினம்	06	(570,513,683,09)	(472,252,353)
விநியோகச் செலவினம்	07	(135,728,350.30)	(73,198,641)
நிதிச் செலவினம்	08	(138,778.71)	(196,565)
இலாபம் / (நட்டம்) தளம்பல் வருமானம் ஒப்பீட்டு முன்னர்		**(602,312,925.58)**	**(487,228,678)**
தளம்பல் வருமானம்	09	141,666,257.82	98,871,316
ஆண்டுக்குள் இலாபம்/ (நட்டம்)		**(460,646,667.76)**	**(388,357,362)**

- குறிப்பு இலக்கம் 1 தொடக்கம் 21 வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் 1 - 5 வரையுள்ள உப ஆவணங்கள் இந்நிதி வெளிப்பாட்டின் பகுதியாகும்.

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை
வருமானம் தொடர்பாக விளக்கமான கூற்று
2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காக

	2018	2017
	ரூபா	ரூபா
ஆண்டுக்குள் இலாபம் / நட்டம்	(460,646,668)	(388,357,362)
ஏனைய விரிவான வருமானம் / செலவின அறவீட்டுவரி		
திறைசேரி ஒதுக்கீடு - மீண்டெழும்	380,000,000	343,050,000
ஏனைய விரிவான வருமானம் ஆண்டிற்காக	380,000,000	343,050,000
மொத்த விரிவான வருமானம் ஆண்டிற்காக	**80,646,668**	**(45,307,362)**

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை

நிதி நிலைமை வெளிப்பாடுகள்

2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று

		குறிப்பு	2018	2017 (மீள் வெளியீடு)
			ரூபா	ரூபா
சொத்துக்கள்				
நடைமுறையல்லாச் சொத்துக்கள்				
சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள்	..	10	1,506,387,348.13	1,298,220,879
இனப்பெருக்க மற்றும் வர்த்தகச் சொத்துக்கள்	..	11	625,100,868.56	587,528,850
அமுலில் உள்ள பணிகள்	..	12	1,004,050,113.78	7,270,428
ஆயுட்கால சொத்துக்கள்	..	13	380,000.00	309,945.00
			3,135,918,330.47	1,893,330,102
நடைமுறைச் சொத்துக்கள்				
இருப்பு	..	14	67,184,977.51	51,202,883
வைப்பு, முற்பணம் மற்றும் முற்கொடுப்பனவு	..	15	70,680,311.59	33,494,658
வர்த்தக மற்றும் ஏனைய கிடைப்பனவுகள்	..	16	113,872,128.80	109,745,283
கையிலுள்ள காசு மற்றும் வங்கியிலுள்ள நிதி	..	17	95,009,131.98	71,094,335
			346,746,549.88	265,537,158
மொத்தச் சொத்துக்கள்			3,482,664,880.35	2,158,867,260
பங்குகள்				
மூலதனம் மற்றும் குழாம்				
திறைசேரி ஒதுக்கீடு	..		1,316,381,478.97	247,774,251
தேக்கிய வைக்கப்பட்ட உழைப்பு	..		-352,369,898.51	(271,723,231,)
சொத்து மீளளிப்புக் குழாம்	..		17,400,000.00	17,609,995.00
மொத்தப் பங்குகள்			981,411,580.46	6,338,985
பொறுப்புக்கள்				
நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்				
ஓய்வூதிய பணிக்கொடைக்கான ஒதுக்கீடு	..	18	97,361,444.06	89,363,920
தளம்பல் வருமானம்	..	19	2,116,793,234.78	1,871,054,747
அரசாங்க வழங்கல்		20	54,040,042.00	54,040,042.00
			2,268,194,720.84	2,014,458,710
நடைமுறை வைப்பு				
வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள்	..	21	155,148,038.09	88,927,808
ஒப்பந்தத்திற்கமைய நிலைப்படுத்தல்	..		77,910,540.95	61,819,727
			233,058,579.04	150,747,535
மொத்தப் பொறுப்புக்கள்			2,501,253,299.88	2,165,206,245
மொத்தப் பங்குகள் மற்றும் பொறுப்புக்கள்			3,482,664,880.34	2,158,867,260

பக்க இலக்க குறிப்பு 1 தொடக்கம் 21 வரையுள்ள கணக்குக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் 1 - 5 வரையுள்ள உப ஆவணம் இந்நிதி வெளிப்பாட்டின் பகுதியாகும்.

.....
கே.என்.ஏ. திசாநாயக்க
பணிப்பாளர், நிதி

.....
பீ. நிமல் சந்தரட்ன
பணிப்பாளர் நாயகம்

.....
N.P.மதவன் ஆரச்சி
தலைவர்

.....
L.T.D.தமரா பெரேரா
பணிப்பளர் சபை அங்கத்தவர்

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை

பங்கு மாற்றங்கள் தொடர்பான வெளிப்பாடுகள்

2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காக

	மீண்டெழும் வழங்கள்	மூலதன வழங்கள் ரூபா	சொத்து மீள் மதிப்பிடுட்டுக் குழதம் ரூபா	தேக்கிவைத்த வைப்பு ரூபா	மொத்தம் ரூபா
2016 ஜனவரி 01 ஆம் திகதியன்று நிலுவை	-	243,328,504.96	17,609,995.00	(226,415,869.12)	34,522,630.84
உரிய காலப்பகுதிக்குரிய வழங்கல் - மீண்டெழும் / மூலதனம்	343,050,000.00	172,350,000.00	-	-	515,400,000.00
காலப்பகுதிக்குரிய வழங்கல் - முறுத்தவெல	-	13,181,207.00	-	-	13,181,207.00
கால எல்லைக்கு பெற்ற நிதியல்லாத வழங்கல்	-	-	-	-	-
கால எல்லைக்குரியதான தளம்பல் வருமானம்	-	(181,085,461.00)	-	-	(181,085,461.00)
இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றியமைத்தல்	(343,050,000.00)	-	-	-	(343,050,000.00)
உயிரியல் சொத்து மீள் மதிப்பீடு	-	-	-	-	-
குறைவு/அதிகரிப்பு தேற்யமான ஒப்பீடு	-	-	-	(4,498,249.72)	(4,498,249.72)
குறைவு/அதிகாப்பு தறம்பல் வருமானம் ((முனனைய ஆண்டு ஒப்பீடு	-	-	-	4,498,249.72	4,498,249.72
கால எல்லைக்குரிய இலாபம்	-	-	-	(45,307,361.62)	(45,307,361.62)
2017 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிலுவை	-	247,774,250.96	17,609,995.00	(271,723,230.75)	(6,338,984.79)
2018 ஜனவரி 01 ஆம் திகதியன்று நிலுவை	-	247,774,250.96	17,609,995.00	(271,723,230.75)	(6,338,984.79)
கால எல்லைக்குரியதாக பெற்ற வழங்கள்- மீண்டெழும்/மூலதனம்	380,000,000.00	250,000,000.00	-	-	630,000,000.00
மூலதன வழங்கள் - அமைச்சு	-	947,235,314.69	-	-	947,235,314.69
கால எல்லைக்குரியதாக நிதியல்லாத மூலதனம்	-	6,500,000.00	-	-	6,500,000.00
கால எல்லைக்குரியதாக தமளம்பல் வருமானம்	-	(135,128,086.68)	-	-	(135,128,806.68)
உயிரியல் சொத்து மீள மதிப்பீடு	-	-	70,055.00	-	70,055.00
குறைவு/மிகை தேய்மான ஒப்பீடு (முன்னைய ஆண்டு ஒப்பீடு)	-	-	-	-	-
குறைவு/மிகை தளம்பல் வருமான ஒப்பீடு (முன்னைய ஆண்டு ஒப்பீடு	-	-	-	-	-
உயிரியல் சொத்து மீள் மதிப்பீடு/இழப்பீட்டு இலாப கணக்கிற்கு மாற்றுதல்	(380,000,000.00)	-	(280,050.00)	-	(380,280,050.00)
கால எல்லைக்குரிய இலபாம்/(நட்டம்)	-	-	-	(80,646,667.76)	(80,646,667.76)
2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிலுவை	-	1,316,381,478.97	17,400,000.00	352,369,898.51	981,411,580.46

* மதப்பீட்டு வழங்கள் (நிதியம்) உள்ளடக்கப்படுவது 2012 ஆண்டில் மீள்அ மதப்பீடு செய்யப்பட்ட கஹந்த மோதர மற்றும் கலாவாவி ஆகிய இரு காணிகளினதும் மதிப்பீடு

*2013 ஆம் அண்டில் இனங்காணப்பட்ட சொத்தாக கருதப்படுவது ரூபா 4,498,249.72 என்ற நிதி 2017 ஆம ஆண்டில் தேக்கிவைக்கப்பட்ட உழைப்பில் மிகை./குறைவு தேய்மான ஒதக்கீடாக காணைப்படுகின்றது.

- 2013 ஆம் அண்டில் இணங்காணப்பட்ட சொத்தாக காணப்பட்டது 4,498,249.72 நிதி 2017 ஆம் அணடில் உழைப்புக்களில் தளம்பல் வருமானமாக மாற்றப்பட்டது.

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை

நிதிப் பாய்ச்சல் கூற்று
2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காக

	குறிப்பு	2018	2017 (மீண்டும் வெளியிடப்பட்டது)
		ரூபா.	ரூபா.
செயற்பாடுகள் மீதான நிதிப் பாய்ச்சல்			
தேறிய இலாபம் / நட்டம் ஆண்டிற்காக		80,646,668.16	45,307,361.62
ஒப்பீடுகள்			
தேய்மானம் - நிலையான சொத்து	10	84,203,491.31	56,507,285.42
தேய்மானம் - இனப்பெருக்க சொத்து	11	57,462,766.51	32,084,054.78
அறவிடமுடியாக் கடன்	16.1	4,611,866.60	1,378,748.30
பணிக்கொடை ஒதுக்கீடு	06.1	10,411,172.45	11,626,814.37
முன்னைய ஆண்டுக்கான ஒப்பீடு		280,050.00	-
சொத்து விற்பனை மூலம் இலாபம்		-	-
தளம்பல் வருமானம்		141,666,257.82	103,109,878.71
செயற்பாட்டு மூலதனம் ஒப்பீட்டுக்கு முன்னர் செயற்பாட்டு இலாபம்		**65,903,679.11**	**49,577,834.06**
(அதிகரிப்பு) / குறைவு - இருப்பு		15,982,094.87	14,710,335.13
(அதிகரிப்பு) / குறைவு - முற்பணம் மற்றும் முற்கொடுப்பனவு		37,185,654.05	8,686,108.35
(அதிகரிப்பு) / குறைவு - கடன்படுனர் மற்றும் ஏனைய கிடைப்பனவு		8,738,712.47	44,706,349.36
(குறைவு) / அதிகரிப்பு - ஒப்பந்தத்திற்கமைய தேக்கி வைக்கப்பட்ட கிடைப்பனவு		16,090,813.76	34,441,362.24
(குறைவு) / அதிகரிப்பு - வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள்		66,220,230.35	15,152,544.78
செயற்பாட்டுப் பணிகள் மூலம் ஈட்டப்பட்ட நிதி		**45,499,096.39**	**68,086,719.88**
பணிக்கொடை கொடுப்பனவு		2,413,649.45	1,809,519.40
செயற்பாட்டு பணிகளின் தேறிய நிதிப் பாய்ச்சல்		**47,912,745.84**	**69,896,239.28**
முதலீட்டு செயற்பாடுகள் மீதான நிதிப் பாய்ச்சல்			
சொத்துக்கள் ஆதனங்கள் உபகரணங்கள் கொள்வனவு		99,423,960.00	167,904,255.44
முடிவுறாப்பணிகள்		78,748,496.79	48,550,774.32
செயற்திட்டத்திற்காக பயண்படுத்தப்படும் அமைச்சு வழங்கள்		833,996,183.45	-
முதலீடு	குறிப்பு 04	-	-
வாகனத்தை அகற்றுதல்		-	-
முதலீட்டு செயற்பாடுகளில் தேறிய நிதப்பாய்ச்சல்		1,012,168,640.24	119,353,481.12
நிதிச் செயற்படுகள் மீது நிதிப்பாய்சல்			
மூலதன ஒதுக்கீட்டு கிடைப்பனவு		250,000,000.00	185,531,207.00
அமைச்சு ஒதக்கீடு		833,996,183.45	-
வருமான வரிக் கொடுப்பனவு		-	-
நிதிச் செயற்பாடுகள் மீதான தேறிய நிதிப் பாய்ச்சல்		1,083,996,183.45	185,531,207.00
நிதி, நிதிக்கு சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு / குறைவு		23,914,797.37	3,718,513.40
ஆண்டு ஆரம்பத்தில் நிதி "நிதி மற்றும் நிதிக்குச் சமமானவைகளின் பெறுமதி"		71,094,334.61	74,812,848.01
ஆண்டு இறுதி நிதி "நிதி மற்றும் நிதிக்கு சமமானவைகளின் பெறுமதி"		95,009,131.98	71,094,334.61
நிதி, நிதிக்கு சமமானவைகளின் விளக்கம்			
ஆண்டு இறுதி			
வங்கி நிலுவை (வங்கியிலுள்ள நிதி)		95,009,131.98	71,094,334.61
நிதி நிலுவை (கையிலுள்ள நிதி)		-	-
		95,009,131.98	71,094,334.61

பக்க இலக்க குறிப்பு 1 தொடக்கம்அ 21 வரை கணக்கீட்டுக் கொள்கை மற்றும் குறிப்பு மற்றும் 1 தொடக்கம் 5 வரையான உப ஆவணம் இந்நிதி வெளிப்பாட்டின் பகுதியாகும்.

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை
கணக்கீட்டுக் கொள்கைகள்

1. நிலையியற் சபைத் தகவல்கள்

1.1 பொதுவான விடயங்கள்

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை 1998 இலக்கம் 53 கொண்ட சட்டத்தின் மூலம் கடற்தொழில் மற்றும் நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அமைச்சின் முழுமையான மேற்பார்வையுடன் தாபிக்கப்பட்டுள்ளது. இதன் பிரதான அலுவலகம் இலக்கம் 41/1, புதிய பாராளுமன்ற வீதி, பலவத்த, பத்தரமுல்ல என்ற இடத்தில் தாபிக்கப்பட்டுள்ளது.

1.2 பிரதான பணிகள் மற்றும் வர்த்தகத்தின் தன்மைகள்

உரிய ஆண்டிற்குள் அதிகார சபையின் பிரதான செயற்பாடுகளாக அமைவது,

- மீன் உற்பத்தி மற்றும் மீன் நுகர்வினை மேம்படுத்துவதற்காக நீரியல் வாழ் செய்கை மற்றும் நீரியல் வாழ் உயிரின செயற்பாடுகளை விருத்தி செய்தல்
- நன்னீர் மற்றும் கரையோரம் சார்ந்த நீரியல் வாழ் செய்கையினை அபிவிருத்தி செய்வதன் மூலம் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல்.
- ஏற்றுமதிக்காக அலங்கார மீன் உட்பட உயரிய பெறுமதிகள் கொண்ட விசேட செயற்பாடுகள் மூலம் விவசாயத் துறையினைக் கட்டியெழுப்புதல்.
- சூழலுக்கு உகந்த நீரியல் வாழ் உயிரினப் பயன்பாட்டின் மூலம் நீரியல் வளத்தை உயர்ந்தபட்சம் உபயோகித்தல்.
- சிறிய, நடுத்தரளவு மற்றும் பாரியளவு தனியார் துறையில் நீரியல் வாழ் செய்கையை ஊக்குவித்தல் மற்றும் தாபித்தல்.
- பின்னடைந்த நீரியல் வாழ் செய்கைகள் மூலம் அழிவடைந்த நீரியல் வளப் பாதுகாப்பு மற்றும் புனர்வாழ்வு செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

1.3. வழங்குவதற்காக அதிகாரம் வழங்கப்பட்ட திகதி

நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்படும் வரை இக் கணக்கீட்டுக் கொள்கைகள் 2017.01.01 ஆம் திகதி தொடக்கம் தொடர்ந்தும் செல்லுபடியாகும். இன்றேல் புதிதாக தயாரிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் முழுமையாக அல்லது ஒரு பகுதியினை அங்கீகரிப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்ட காலமும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. முக்கியத்துவம் வாய்ந்த கணக்கீட்டுக் கொள்கையின் சுருக்கங்கள்

2.1. நிதி வெளிப்பாடுகளைத் தயாரிப்பதற்கான அடிப்படைகள்

கணக்கீட்டு அறிக்கைகள் வரலாற்றுச் செலவினத்தின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆண்டுக்குள் சொத்துக்களின் மீள் மதிப்பீட்டுப் பெறுமதி ஒப்பீடு மற்றும் பணவீக்க செயற்சாதனைகளுக்காக ஒப்பீடுகள் மேற்கொள்ளப்படவில்லை.

2.2. ஒப்பீடுகள் தொடர்பான வெளிப்பாடுகள்

அதிகார சபையின் நிதியறிக்கை வெளிப்பாடுகள் தயாரிக்கப்பட்டிருப்பது இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் பணிக்கப்பட்ட அரச துறையின் கணக்காளர் தரங்களுக்கு அமைவாக மற்றும் 1971 இலக்கம் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கமையவாகும்.

2.3 செயற்பாடுகள் மற்றும் சமர்ப்பிப்பு நிதி

நிதி வெளிப்பாடுகள் தயாரிக்கப்படுவது வங்கியின் செயற்பாடுகள் மற்றும் சமர்ப்பிப்பு நிதியான இலங்கை ரூபா அடிப்படையிலாகும்.

2.4. ஒப்பீட்டுத் தகவல்கள்

அதிகார சபையினால் கணக்கீட்டுக் கொள்கைகள் உரியவாறு தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் வேறு முறையிலான வெளிப்பாடுகள் இன்றி இருப்பின் முன்னைய ஆண்டில் பயன்படுத்தப்பட்டவைகளுடன் ஒப்பீடு செய்யப்படுகின்றது.

2.5. பௌதீக மற்றும் இணைப்புச் செயற்பாடுகள்

நிதி வெளிப்பாடுகளை சமர்ப்பிப்பதற்கமைய இலங்கை அரச துறையின் கணக்கீட்டு தரங்களுக்கமைவாக நிதி வெளிப்பாடுகள் அவ்வவ் பிரிவுகள் தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. பல்வேறுபட்ட தன்மைகள் மற்றும் அவற்றின் செயற்பாடுகள் தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

நிதிச் சொத்து எனப்படுவது நிதிப் பொறுப்பினைத் தீர்ப்பதாகும். நிதி நிலைமை வெளிப்பாடுகளில் அறிக்கைப்படுத்தப்பட்டுள்ள தேறிய நிதியளவு அங்கீகரிக்கப்பட்ட அளவில் விகிதாசாரத்திற்கு மாற்றியமைப்பதற்காக சட்டரீதியாக அமுல்படுத்தக்கூடிய உரிமை காணப்படுகின்றது. தேறிய அடிப்படைக்கமைய தீர்த்தல் அல்லது சொத்துக்கள் மற்றும் சொத்துக்களை பெற்றுக் கொள்வதற்கான பொறுப்புக்களுக்கு இணைவாக தீர்க்கப்பட வேண்டும்.

எவையேனும் கணக்கீட்டுத் தரங்கள் அல்லது வரைவிலக்கணத்தின் மூலம் தேவையான அல்லது அனுமதி வழங்கப்பட்டுள்ள வருமான வெளிப்பாடுகளில் வருமானம் மற்றும் செலவினங்களை மீள் கட்டமைக்கவில்லை என்பதுடன் கணக்கீட்டுத் தரங்களில் விசேடமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

2.4 வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவைகள்

வர்த்தகச் செயற்பாடுகள் மூலம் கிடைக்க வேண்டிய அறவிட முடியாக்கடன் மற்றும் ஐயக்கடன் ஒப்பீடுகளுக்கு முன்னர் தேறிய பெறுமதி காண்பிக்கப்பட்டுள்ளது. ஏனைய கிடைக்க வேண்டியவைகள் செலவினத்திற்கமைய இனங்காணப்பட்டுள்ளது.

2.5 நிதி மற்றும் நிதிக்குச் சமமானவைகள்

நிதி மற்றும் நிதிக்குச் சமமானவைகள் என வரைவிலக்கணப்படுத்தப்பட்டிருப்பது கையிலுள்ள நிதி மற்றும் வங்கியிலுள்ள நிதியாகும்.

2.7 சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள்

காணியைத் தவிர ஏனைய சொத்து செலவினத்தின் திரண்ட தேய்மானத்தைக் குறைத்து தேறிய பெறுமானம் காண்பிக்கப்பட்டுள்ளது.

சொத்துக்களின் பயன்மிக்க ஆயுட்காலம் பூராகவும் இலகுவான முறைகளை அடிப்படையாகக் கொண்டு தேய்மானம் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. தேய்மான விகிதாசாரம் கீழே குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.

கட்டிடங்கள் மற்றும் நிர்மாணிப்பு	4%
வாகனம்	20%
தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்கள்	10%
இரசாயனகூட உபகரணங்கள்	10%
இயந்திரங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள்	10%
இனப்பெருக்க நிலைய உபகரணங்கள்	10%
மீன் தடாகங்கள்	10%
மீன் வாவிகள்	6%

உபகரணங்கள் மற்றும் பாகங்கள்	10%
கணணி மற்றும் தகவல் பரிமாற்றல் உபகரணங்கள்	20%
கணணி மென்பொருள்	10%

2.8 ஐயக்கடன்

ஐயக்கடன்படுனர்கள் தொடர்பில் 2012 - 2016 வரை கடன்படுனர் நிலுவை மீது 10% ஒதுக்கீடு மற்றும் 2010, 2011 ஆம் ஆண்டுக்காக முழுமையான ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆண்டுக்குள் ஐயக்கடன் படுனர்களுக்காக மேலதிகம் / குறைவாக வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளுக்காக இலாப நட்டங்களுக்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.9. இருப்பு

தொகைச் செலவினம் அல்லது தேறிய திரண்ட பெறுமதியிலிருந்து குறைந்த பெறுமதிக்கு கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

2.10 ஓய்வூதியப் பணிக்கொடை

<u>பணிக்கொடை கொடுப்பனவினை வரைவிலக்கணப்படுத்தல்</u>

பணிக்கொடை கணிப்பீடு செய்யப்பட்டிருப்பது சேவைக்கு இணைந்த தினம் தொடக்கம் ஆண்டுக்கு ½ மாதங்களுக்குள் சம்பளத்தின் அடிப்படையிலாகும். இருப்பினும் 1983 இலக்கம் 12 கொண்ட பணிக்கொடை சட்டத்திற்கமைய அதிகார சபையின் 5 வருடங்கள் தொடர்ச்சியாக சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து மாத்திரம் பணிக்கொடையினை பெற்றுக் கொள்வதற்காக சட்ட ரீதியிலான கட்டுப்பாடுகள் உள்ளன.

<u>பங்காளர் திட்டங்களை வரைவிலக்கணப்படுத்தல் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் பொறுப்பு நிதியம்</u>

ஊழியர்களின் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு செய்வது கட்டாயம் என்பதுடன் ஊழியர் பொறுப்பு நிதியத்திற்குரிய கோவைக்கமைய மேற்கொள்ளப்படுகின்றது. அதிகார சபையின் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் பொறுப்பு நிதியத்திற்கு தொடராக மொத்த தேறிய உழைப்பிலிருந்து 15% மற்றும் 3% பங்களிப்பு செய்யப்படுகின்றது.

2.11 செலவினத்தை இனங்காணுதல்

வருமான வெளிப்பாட்டில் செலவினமாக இனங்காணப்பட்டிருப்பது அவ்வவ் வருமான உழைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள செலவினமாகும். சகல உற்பத்தி செயற்பாடுகளுக்காகவும் மேற்கொள்ளப்படும் செலவினம் மற்றும் சொத்துக்கள், ஆதனங்கள், உபகரணங்களின் வினைத்திறன் உட்பட பயன்பாட்டிற்காக பராமரிப்பு வருமானத்திற்கு அறவீடுகள் மூலம் ஆண்டிற்குரிய இலாபம் / நட்டப் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை

2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காக நிதி வெளிப்பாடுகளின் கணக்குக் குறிப்பு

			31/12/2018	31/12/2017
			ரூபா	ரூபா
03	வருமானம்			
	6301 - 1	கடன் விற்பனை (மீன் சினை)	106,738,857.50	65,605,092.00
	6301- 1	காசுக்கு விற்பனை (மீன் சினை)	55,650,174.10	48,380,296.75
		நக்டா மீன் சினை (இலவசமாக வழங்குதல்)	28,177,940.00	-
	மொத்தம்		**190,566,971.60**	**113,985,388.75**
04	விற்பனைச் செலவினம்			
	2018.01.01 திகதியன்று இருப்பு			
		மீன் சினை	2,711,566.00	4,521,861.00
		தாய் மீன் இருப்பு	7,696,600.01	6,714,641.50
			10,408,166.01	11,236,502.50
	கூட்டு - நேரடி செலவினம்			
	2105	தாய் மீன் விருத்தி	8,729,085.31	1,730,759.88
	மீன் சினை நுகர்வு			
		முன்கொண்டு சென்ற நிலுவை	6,226,676.50	8,633,830.27
	3102	கொள்வனவு	62,927,346.21	42,725,965.80
	1304	கழி - 2018.12.31 ஆம் திகதியன்று இருப்பு	(6,928,150.50)	6,226,676.50
			62,225,872.21	45,133,119.57
	ஹோர்மோன், இரசாயப் பொருள், ஒக்சிஜன்			
		முன்கொண்டு செயன்ற நிலுவை 01.01	12,886,347.37	16,318,616.12
	3103	கொள்வனவு	4,727,714.41	5,241,218.74
	1305	கழி - இருப்பு 12.31 ஆம் தகிதயன்று	(14,553,635.47)	(12,886,347.37)
			3,060,426.31	8,673,487.49
	இணப் பெருக்பக செயற்பாடுகளில் பொது செயற்பாட்டு செலவினம்			
	1504	மின்சாரம் மற்றும் நீர் செலவனம் 60%	12,063,048.66	10,958,017.06
	1507	பாதுகாப்பு செலவினம் 50%	15,365,201.28	11,655,998.65
	1403	இயந்திரங்கள் மற்றும் ஆதனங்கள் சிறு பழுதுபாாப்பு செயற்பாடுகள்.	1,599,161.68	2,123,703.83
	2102B	இயந்திரங்கள் மற்றும் ஆதனங்கள் பராமரிப்பு	3,967,977.82	3,750,988.08
	1708	தேய்மான கணக்கு - கொள்வனவு	59,943,664.93	34,323,788.89
			92,939,054.37	62,812,496.50
	கழி - 2018.12.31 ஆம் திகதியன்று இருப்பு			
		மீன் சினை	(5,696,949.50)	(2,711,566.00)
	3104B	தாய் மீன் இருப்பு	(15,159,130.00)	(7,696,600.01)
			(20,856,079.50)	(10,408,166.01)
	மொத்தம்		**156,506,524.71**	**119,178,199.92**

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை

2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காக நிதி வெளிப்பாடுகளின் கணக்குக் குறிப்பு

05	ஏனைய வருமானம்	2018.12.31திகதியன்று	2017.12.31 திகதியன்று
6303	சுற்றுலா பங்கலா வருமானம்	1,383,005.00	1,517,250.00
6304	ஏனைய வருமானம்	6,157,032.29	4,271,022.69
6305	வீட்டு வாடகை	327,819.77	285,941.58
6306	கேள்விஅ வைப்பு	1,521,000.00	2,121,700.00
6309	இடர் கடன் வட்டி	2,017,129.70	1,932,219.42
6310	துவிச்சக்கர வண்டி கடன்	14,761.28	21,128.65
6312	அலங்கார மீன் பயிற்சி வேலைத்திட்ட வருமானம்	5,823,075.00	4,092,954.00
6313	நீரியல் வாழ் செய்கை அனுமதிப்பததிர வருமானம்	5,129,678.33	5,631,260.00
6315	கலா வாவி மத்திய நிலையததில் கிடைக்கும் வாடகை வருமானம்	29,573,630.83	25,249,176.82
6316	தண்டப்பணம்	1,945,636.75	2,758,135.00
6317	மீன் குடம்பி கொண்டு செல்லல்	8,450,669.66	5,907,018.85
6318	இரசாயன ஆய்வுகூட பரிசோதனை வருமானம்	4,699,655.00	5,565,375.00
6319	கடற்றொழிலாலர் அடையாள அட்டை வருமானம்	64,420.00	154,370.00
6320	துறைசார் செயற்பாட்டு வருமானம்	1,173,000.00	1,185,000.00
6321	வருமானம் P P P	1,140,000.00	2,492,968.00
6322	புத்தகக் கடன் வட்டி வருமானம்	19,376.02	20,636.00
6404	ADB மினிஹவரி கடன் தவனை	287,500.00	399,232.83
	VAT இற்காக ஒதுக்கீடு செய்ப்பட்ட மிகை	-	6,303.96
	மொத்தம்	**69,727,389.63**	**63,611,692.80**

06	நிர்பவாக செலவினம்		
06.1	ஊழியர் ஊதியம்		
1101	சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவு	206,167,728.43	163,314,509.65
1102	மேலதிக நேர விடுறை தின கொடுப்பனவு	23,390,827.72	16,330,405.89
1103	ஏனைய கொடுப்பனவு	91,324,628.98	101,957,984.80
1104	ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு	39,605,041.89	32,382,912.93
1105	ஊழியர் பொறுப்பு நிதிய பங்களிப்பு	7,929,300.59	6,483,510.67
1307	சீருடை துண்க்கான கொள்வனவு	45,600.00	292,897.86
1516	ஊழியர் நலன்புரி செலவினம்	2,797,945.41	2,315,847.99
1701	பணிக்கடைக்கான ஒதக்கீடு	10,411,172.45	11,626,814.37
		381,672,245.47	334,704,884.16

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை

2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காக நிதி வெளிப்பாடுகளின் கணக்குக் குறிப்பு

			31/12/2018	31/12/2017
06.2		**தொடர்புசாதனம்**		
	1502	தொலைபேசி,டெலக்ஸ் செய்தி மற்றும் பக்ஸ் செலவினம்	4,808,254.32	4,322,755.67
	1503	தபால் மற்றும் தந்தி செலவினம்	697,046.80	643,056.50
			5,505,301.12	4,965,812.17
06.3		**புணரமைப்பு மற்றும் பராமரிப்புச் செலவினம்**		
	1402	அலுவலக மற்றும் கட்டிட சிறு புணரமைப்புப் பணிகளுக்காக	2,604,973.67	2,914,879.23
	1404	அலுவலக மற்றும் சிறு புணரமைப்புப் பணிகளுக்காக	2,186,183.75	1,816,022.24
	1705	நிலையான சொத்து தேய்மானம்	61,238,379.00	40,179,835.17
			66,029,536.42	44,910,736.64
06.4		**அலுவலக வளாக பராமரிப்புச் செலவினம்**		
